# (ஆ) வெளிநாட்டு வர்த்தகம்

**பொதுப்படையான போக்கு**

அட்டவணை II ஆ-1 சுங்கப்புள்ளி விபரங்களிற் குறிக்கப்பட்டுள்ள படி, இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தைப் பற்றிய மொத்தத் தரவைக் கொடுக்கின்றது.

**அட்டவணை II ஆ-1**

**வெளிநாட்டு வர்த்தகம், 1959-1963**

| வருடம் | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | இறக்குமதிகளுக்கு ஏற்றுமதிகளின் சதவீத விகிதப்படி |
|---|---|---|---|---|
| | ஏற்றுமதிகள்† (க.ஏ.வி.) | இறக்குமதிகள் (கொ.கா.க.) | வர்த்தக நிலுவை | |
| 1959 .. .. | 1,754 | 2,005 | −251 | 87 |
| 1960 .. .. | 1,832 | 1,960 | −128 | 93 |
| 1961 .. .. | 1,733 | 1,703 | + 30 | 102 |
| 1962 .. .. | 1,808 | 1,660 | +148 | 109 |
| 1963 .. .. | 1,731 | 1,500 | +231 | 115 |

மூலம்: இலங்கைச் சுங்கப்புள்ளி விபரங்கள்.

†திருப்பி ஏற்றுமதி செய்யப்பட்டவையும் அடங்கும்.

சென்ற வருடத்துடன் ஒப்பிடுகையில் 1963ல் ஏற்றுமதிகளின் பெறுமானம் ரூபா 770 இலட்சங்களால் அல்லது 4.3 சதவீதத்தாற் குறைவடைந்து, ரூபா 17310 இலட்சங்களாக இருந்தது. எனினும், இவ்வருடத்திற்கான இறக்குமதிகள் அதி தீட்சணமாக வீழ்ச்சியுற்று ரூபா 15,000 இலட்சம் பெறுமானமுள்ளவையாக விளங்கின. இவை, 1962ம் ஆண்டிலிருந்த அவற்றினது மட்டத்திலும் பார்க்க 1,600 இலட்சம் ரூபாய்களால் அல்லது 9.6 சதவீதத்தாற் குறைவுற்றிருந்தன. ஆகவே, 1963ல் வர்த்தக நிலுவை உள்ளபடி அதிக திருத்தத்தைக் காட்டிற்று—அதாவது, சென்ற வருட மிகையான ரூபா 1480 இலட்சங்களுடன் ஒப்பிடுகையில், ரூபா 2310 இலட்சங்கள் கொண்ட மிகையைக் காட்டிற்று. சென்றவருட விகிதமாகிய 109 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், ஏற்றுமதிகளால் ஈடுசெய்யப்பட்ட இறக்குமதிகளின் விகிதம் 115 சதவீதத்திற்கு உயர்ந்தது.

இங்கு காட்டப்பட்டுள்ள நிலைவரம் சுங்கத்தரவுகளிலிருந்து கிடைக்கப் பெற்றது என்பது வலியுறுத்தப்படவேண்டியதொன்றாகும். இப்பொருட்கள் ஏற்றுமதிக்கோ அல்லது இறக்குமதிக்கோ புகும்போது, சுங்கத்தரவுகளிற் பதியப்பட்டுள்ளபடி, இவை இறக்குமதிகளினதும் ஏற்றுமதிகளினதும் பௌதிக இயக்கத்தைப் பிரதிபலிக்கின்றன. காலத்தின்படி நோக்கின், இப் பொருட்களினது இயக்கத்திற்கும் இவை பிரதிபலிக்கும் பணக்கொடுக்கல் வாங்கல்களுக்கும் அத்தியாவசியமான தொடர்பொன்றுமில்லை. செலாவணிக் கட்டுப்பாட்டு ஏடுகளிற் பிரதிபலிக்கப்பட்டுள்ளபடி, இப்பணக்கொடுக்கல் வாங்கல்களுக்கான தரவுகள், உண்மையான கொடுப்பனவுகளை அடிப்படையாகக்கொண்டவை. சென்மதி நிலுவையின் மேலும், வெளிநாட்டு இருப்புச் சொத்துக்களின் மேலும் பிரிவு (ஏ)யிற் காண்கின்றபடி, மேலே காட்டப்

பட்டுள்ள நிலைவரத்திற்கும், இத்தரவுகளிலிருந்து கிடைக்கப்பெற்ற வணிகப் பொருட்கணக்கு நிலைவரத்திற்கும் கணிசமான அளவு வேற்றுமை இருந்திருக்கும். இப்பிரிவிலுள்ள பாகுபாடு, வேறொன்றும் குறிப்பிடாதவிடத்து, சுங்கத்தரவுகளையே[1] அடிப்படையாகக் கொண்டது.

மீளப்பார்வையிடும் வருடத்தின் கீழ் உள்ள நிலைவரத்தின் முக்கியத் தொடர்புள்ளதான ஒரு அம்சம் யாதெனில், கார்த்திகை நடுப்பகுதியிற் தொடங்கி 1964ம் ஆண்டு தை மாதம்வரை தொடர்ந்த, கொழும்பு துறைமுகக் கப்பற் சரக்கு கூட்டுத்தாபனத்தின் குறிப்பிட்ட தரங்களிலுள்ள ஊழியர்களினது, வேலைநிறுத்தமாகும். இத்துடன் கூடுதலாக, கொழும்பிலும், தீவின் ஏனைய துறைமுகங்களிலுமுள்ள சுங்கத்திணைக்களத்தினது சில ஊழியர்களும் 1963ன்[2] மார்கழி மாத முதல் அரைப்பகுதியில், வேலை நிறுத்தம் செய்தனர். இறக்குமதிகளினதும் ஏற்றுமதிகளினதும் கப்பற் சரக்குகளை ஏற்றுவதிலும் இறக்குவதிலும் நேரடியாக ஈடுபட்ட தொழிலானது, இவ்வேலைநிறுத்தங்களால் மிகவும் குறைவாகப் பாதிக்கப்பட்டிருக்கையில், வருடத்தின் கடைசி இருமாதங்களிலுமுள்ள ஏற்றுமதிகளினதும் இறக்குமதிகளினதும் பிரவாகத்தை இவ்வேலைநிறுத்தங்கள் பாரதூரமாகப் பாதித்தன. சென்ற பதினொரு மாதங்களின் சராசரியோடு ஒப்பிடுகையில் ஏற்றுமதிகளின் பெறுமானம் மார்கழி மாதத்தில் ரூபா 460 இலட்சங்கள் கொண்ட வீழ்ச்சியைக் காட்டிற்று. இவ்வீழ்ச்சி, விலை, வானிலை அல்லது பருவ நிலைக் காரணங்களாற் கணக்கிடக்கூடியதை விட அதிகமாயுள்ளது. நாட்டினது பொருளாதாரத்தில், கொழும்புத் துறைமுகத்திலிருந்த சீரடையாத நிலைமை, தீங்குண்டாக்கும் விளைவையுடையது என்பதிற் சந்தேகம் சிறிதளவேயாகும். அட்டவணை II ஆ-2 ஏற்றுமதிகளினது அமைப்பைத் தருகின்றது.

### அட்டவணை II ஆ-2

### ஏற்றுமதிகளின் அமைப்பு

| பண்டம் | பெறுமானம் பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | மொத்த இறக்குமதிகளின் சதவீதமாக | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1960 | 1961 | 1962 | 1963 | 1960 | 1961 | 1962 | 1963 |
| தேயிலை .. .. .. | 1096 | 1115 | 1149 | 1140 | 59·8 | 64·3 | 63·6 | 65·9 |
| இரப்பர் .. .. .. | 378 | 260 | 290 | 257 | 20·7 | 15·0 | 16·0 | 14·8 |
| 3 பிரதான தெங்குப் பொருட்கள் .. | 184 | 202 | 227 | 198 | 10·0 | 11·7 | 12·6 | 11·4 |
| ஏனைய உள்நாட்டு ஏற்றுமதிகள் | 117 | 104 | 100 | 110 | 6·4 | 6·0 | 5·5 | 6·4 |
| மொத்த உள்நாட்டு ஏற்றுமதிகள் .. | 1775 | 1681 | 1766 | 1705 | 96·9 | 97·0 | 97·7 | 98·5 |
| திருப்பி ஏற்றப்பட்டவை .. | 57 | 52 | 42 | 26 | 3·1 | 3·0 | 2·3 | 1·5 |
| மொத்தம் .. .. | 1832 | 1733 | 1808 | 1731 | 100·0 | 100·0 | 100·0 | 100·0 |

*மூலம்: இலங்கை சுங்கப்புள்ளி விபரங்கள்.*

(1) சுங்கப் பதிவுகள் பொருட்கள் அகற்றப்படும் அதே சமயத்திலோ அல்லது அகற்றப்பட்ட பின் கூடிய விரைவிலோ முடிவுறுவிடின், பொருட்களினது பௌதிக இயக்கத்திற்கும், ஏடுகளிற் குறிக்கப்பட்டுள்ள இயக்கத்திற்கும், கணிசமான அளவு வேற்றுமைகளும் இருக்கக் கூடும். இதுபோன்ற வேற்றுமைகள் அரசாங்க இறக்குமதிகளின் பேரிற் குறிப்பிடத்தக்க அளவு பெருமளவினதாக (முக்கியமாக, மொத்த இறக்குமதிகளில் மிகக்கூடிய விகிதசமமாக உள்ளவற்றிற்கு அடிகோலும் உணவுப்பொருள் இறக்குமதிகள்) இருந்திருக்கின்றன. இது சம்பந்தமாக, பொருட்கள் அகற்றப்படுவதற்கும், இவற்றிற்குத் தொடர்பான பதிவுகள் முடிவுறுவதற்கும் அதிகமாக ஒரு நீண்டகால இடைவெளியுள்ளது. இவ்விடை வெளியை நீக்குதலோ அன்றி அசட்டை செய்யக்கூடிய விகிதசமங்களுக்குக் குறைத்தலோ, பொருளாதாரப் பாகுபாட்டுத் தேவைகளின் உபயோகத்திற்குச் சுங்கத்தரவுகளின் மதிப்பைக், கணிசமான அளவிற்கு உயர்த்தக்கூடும்.

(2) 1963ம் ஆண்டு, மார்கழி 31ல், துறைமுகக் கப்பற் சரக்குக் கூட்டுத்தாபனத்தின் வேலை நிறுத்தக்காரர்களுக்கு ஆதரவாக இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் முழு அங்கத்தவர்களும் வேலைநிறுத்தம் செய்தனர்.

மொத்த ஏற்றுமதித்தொகுதியின் வீழ்ச்சி 1963ன் மொத்த ஏற்றுமதி வருமான வீழ்ச்சிக்கு அடிகோலியது. மகாவங்கிக்குறிகாட்டி 111 புள்ளிகளாக இருந்து, சென்ற வருடத்திற்குத் தொடர்பாக 3.5 சதவீத வீழ்ச்சியைக் காட்டிற்று. ஏற்றுமதிகளினது சராசரி விலையில் ஒரு மாற்றமும் இருக்கவில்லை. இவ்விலைக்கான வங்கியின் குறிகாட்டி சென்ற வருடத்தின் குறைந்தமட்டமான 93 புள்ளிகளிலேயே இருந்தது—இது பத்து வருடங்களுக்கு மேலாக மிகக் குறைந்ததாகும். என்றாலும், தனிப்பட்ட ஏற்றுமதிப் பண்டங்களின் நிலை சம்பந்தமாக, இப்பொதுப்படையான முன்னேற்றங்களுக்கு அடிப்படையாகச் சிறு முக்கியத்துவமுள்ள மாற்றங்கள் இருந்தன.

ஏற்றுமதிகள் 0.9 சதவீதத்தால் விரிவடைந்ததும், பிரதான அந்நிய செலாவணி வருமானத்தை உழைத்துத் தருவதுமான தேயிலையை, ஏற்றுமதிகளினது தொகுதியின் வீழ்ச்சி பாதிக்கவில்லை. ஆனால் தேயிலையிலிருந்து கிடைத்தவை, ரூபா 90 இலட்சங்களால் அல்லது 0.8 சதவீதத்தாற் குறைந்தன. சென்ற வருடத்திலிருந்த கூர்மையான வீழ்ச்சியைவிட ஓரளவு குறைவாக என்றாலும், எல்லா ரகத் தேயிலைகளினதும் கப்பலில் ஏற்றப்பட்டவரை பெறுமானமுள்ள சராசரி விலை தொடர்ந்து வீழ்ந்தது. இது அவ்வருட மட்டமாயிருந்ததற்கு 4 சதங்கள் அல்லது 1.6 சதவீதம் குறைவாக, இறாத்தலுக்கு ரூபா 2.50 ஆக இருந்தது. அண்மையிற் சென்ற வருடங்களைவிட ஓரளவு பெரிய பங்காக, மொத்த ஏற்றுமதி வருமானங்களிலே தேயிலையின் பங்கு, 65.9 சதவீதமாக இருந்தது.

சென்ற வருடத்துடன் ஒப்பிடுகையில், இரப்பரின் வருமானங்கள் ரூபா 330 இலட்சங்களால் அல்லது 11.4 சதவீதத்தால் குறைந்தன. ஏற்றுமதி செய்யப்பட்ட தொகையும், கூர்மைக்குறைவாகவெனினும், 6.7 சதவீதத்தால் அல்லது 150 இலட்சம் இறாத்தல்களால் வீழ்ந்தது. இரப்பரது எல்லாத்தரங்களினதும் கப்பலிலேற்றப்பட்டவரைப் பெறுமானமுள்ள சராசரி விலை, இறாத்தலுக்கு 6 சதத்தால் அல்லது 4.7 சதவீதத்தாற் குறைந்தது.

மூன்று பிரதான தெங்குப்பொருட்களினதும் வருமானங்கள், ரூபா 290 இலட்சங்களால் அல்லது 12.8 சதவீதத்தால் வீழ்ந்தன. இவ்வீழ்ச்சி, இவ் ஏற்றுமதிகளினது மொத்தத் தொகுதியிலேற்பட்ட வீழ்ச்சியினாலேயே உண்டாயது. இதன் வங்கிக் குறிகாட்டி சென்ற வருடத்திலிருந்தே 173 புள்ளிகளிலிருந்து, 136 புள்ளிகளுக்கு 21.4 சதவீதத்தாற் கூர்மையாக வீழ்ச்சியுற்றது. இப்பொருட்களினது சராசரி விலை 9.8 சதவீதத்தால் உயர்ந்தது. இவ்விலையினது வங்கிக்குறிகாட்டி, 1962லிருந்த 82 புள்ளிகளிலிருந்து, 90 புள்ளிகளுக்கு உயர்ந்து, தேயிலையினதும் இரப்பரினதும் விலைகளின் வீழ்ச்சிகளை ஈடுசெய்தது.

அரசாங்க உணவு இறக்குமதிகள் பதிவு செய்தலில் ஏற்படக்கூடிய காலதாமதங்களினால் எழும் மாற்றங்களைத் தவிர, 1962லிருந்த அவற்றினது மட்டத்திலிருந்து ரூபா 1600 இலட்சங்கள் கொண்டதான இறக்குமதிகளின் வீழ்ச்சி, உள்ளபடி அதிகரிக்கப்பட்ட இறக்குமதி உத்தரவுக் கட்டுப்பாட்டின் விளைவால் உண்டானதாகும். 1963ன் போது விதித்த மட்டுப்படுத்தல்களின் செல்வாக்கிற்குக் கூடுதலாக, 1962ன் கடைசி அரையாண்டின்போது, குறிப்பிடும்படியாக ஆடி 26லும், புரட்டாதி 15லும், ஐப்பசி 10லும், கொண்டுவரப்பட்ட கடுமையான மட்டுப்படுத்தல்களின் முழு மோதுகையை, இந்த வருடம் காணும்படி நேர்ந்தது. எல்லா இறக்குமதிகளினதும் தொகு

திக்கான வங்கியின் குறிகாட்டி சென்ற ஆண்டிலிருந்த 92 புள்ளிகளிலிருந்து 79 புள்ளிகளுக்கு 14.1 சதவீதத்தாற் கூர்மையாக வீழ்ச்சியுற்றது. இறக்குமதிகளின் பலவித வகுப்புகளுக்குமான வேறுபட்ட குறிகாட்டிகள் யாவும் இவ்வீழ்ச்சி எல்லா வகுப்புகளையும் பாதித்ததென்பதைக் காண்பிக்கின்றன. ''நுகர்ச்சிப் பொருட்கள்'' தொகுதியின் வீழ்ச்சி 16.7 சதவீதமாயிருக்கையில், ''நடுத்தரப்பொருட்களினதும்'', ''முதலீட்டப் பொருட்களினதும்'' தொகுதிகளின் வீழ்ச்சிகள் முறையே 5.3 சதவீதமும், 19.8 சதவீதமுமாக இருந்தன. ''நுகர்ச்சிப் பொருட்கள்'' தொகுதிக்குள் ''உணவும் பொருட்களும்'' என்ற உபதொகுதி மிகக் குறைந்த வீழ்ச்சியைக் காட்டுகையில்—இது 5.6 சதவீதமாகும்—''ஆடைகள்'', ''ஏனைய நுகர்ச்சிப் பொருட்கள்'' ஆகிய உபதொகுதிகள், முறையே 43.2 சதவீதமும் 44.4 சதவீதமுமாக மிகத் தீட்சணமாகக் குறைந்தன.

இறக்குமதிகளினது சராசரி விலை 10.5 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்விலைக்கான வங்கியின் குறிகாட்டி, சென்ற வருடத்திலிருந்த 95 புள்ளிகளிலிருந்து, 105 புள்ளிகளுக்கு உயர்ந்தது. இந்த வளர்ச்சி, இறக்குமதிகளினது சராசரி விலை 5.9 சதவீதத்தாற் குறைவுற்றிருந்த 1962னது அநுபவத்திற்கு முற்றிலும் முரணாக உள்ளது. அத்துடன் உண்மையாகவே, இந்த விலை ஒரு மாற்றமும் காட்டாத சென்ற மூன்று வருடங்களினது அநுபவத்திற்கும், முரண்பாடாக உள்ளது.

இறக்குமதிகளினது பலதரப்பட்ட வகுப்புக்களுக்குமான வங்கியின் குறிகாட்டிகள் இவ்வகுப்புகள் யாவும் விலைகளின் உயர்ச்சிகளினாற் பாதிக்கப்பட்டிருப்பதைக் காட்டுகின்றன. மூன்று பிரதான தொகுகளுக்குள் ''நுகர்ச்சிப் பொருட்கள்'' தொகுதி மிகப்பெரிய அதிகரிப்பைப் பதிவித்தது—இது 13.3 சதவீதமாகும். ''நடுத்தரப்பொருட்களினதும்'' ''முதலீட்டப்பொருட்களினதும்'' தொகுதிகள் முறையே, 1.2 சதவீதமும் 6.5 சதவீதமுமாகிய அதிகரிப்புகளைக் குறித்தன. ''நுகர்ச்சிப் பொருட்கள்'' தொகுதியுள்ளே அங்கங்களான உபதொகுதிகள், மேலும் அகன்றதான விலைமாற்றங்களைக் காட்டின. ''உணவும் குடிவகைகளினதும்'' விலை 9.2 சதவீதத்தால் உயர்ந்திருக்கும் போதும், ''ஆடைகள்'' விலை மாற்றமொன்றும் காட்டாமலிருக்கும் போதும், ''ஏனைய நுகர்ச்சிப் பொருட்களின்'' விலை 37.0 சதவீதத்தாற் கூர்மையாக உயர்ந்தது.

1962ற் குறித்திருந்த 4.3 சதவீத சீர்திருத்தத்திற்கு முரணாக, 1963ம் ஆண்டானது, இலங்கையின் வர்த்தக மாற்று விகிதத்தில் ஓர் கணிசமான அளவு சீர்கேட்டைக் கண்டது. வர்த்தக மாற்று விகிதத்திற்கான வங்கியின் குறிகாட்டி, சென்ற வருடத்திலிருந்த 98 புள்ளிகளிலிருந்து 9.2 சதவீதத்தால் 89 புள்ளிகளுக்கு வீழ்ச்சியுற்றது. பத்து வருடங்களுக்குப்பின் இதுவே மிகக் கூர்மையான வீழ்ச்சியாகும்.

ஏற்றுமதிகள்

தேயிலை

அட்டவணை II ஆ-3 தேயிலையின் உற்பத்தியும், ஏற்றுமதிகளும், விலைகளும், பற்றிய தரவுகளைக் கொடுக்கின்றது.

### அட்டவணை II ஆ-3

### தேயிலை-உற்பத்தியும், ஏற்றுமதிகளும், விலைகளும்

| வருடம் | உற்பத்தி | ஏற்றுமதிகள் | | கொழும்பு ஏலச்சராசரி விலைகள் இருத்தலுக்கு | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | அளவு பத்து இலட்சம் இருத்தல் | அளவு பத்து இலட்சம் இருத்தல் | க.ஏ.பெ. விலை இருத்த லுக்கு ரூ. சதம் | உயர்ந்த பிரதேச | மத்திய பிரதேச | தாழ்ந்த பிரதேச | சகல தேயிலை களும் |
| 1955 .. .. | 380 | 362 | 3·30 | 2·34 | 2·04 | 2·40 | 2·24 |
| 1956 .. .. | 376 | 348 | 3·00 | 2·50 | 1·96 | 1·88 | 2·16 |
| 1957 .. .. | 398 | 368 | 2·78 | 2·05 | 1·61 | 1·88 | 1·86 |
| 1958 .. .. | 413 | 411 | 2·75 | 2·11 | 1·51 | 1·48 | 1·73 |
| 1959 .. .. | 413 | 384 | 2·72 | 2·13 | 1·69 | 1·67 | 1·85 |
| 1960 .. .. | 435 | 410 | 2·67 | 2·03 | 1·75 | 1·83 | 1·88 |
| 1961 .. .. | 455 | 426 | 2·62 | 1·99 | 1·72 | 1·74 | 1·83 |
| 1962 .. .. | 467 | 452 | 2·54 | 2·02 | 1·61 | 1·56 | 1·75 |
| 1963 .. .. | 485 | 456 | 2·50 | 1·90 | 1·54 | 1·53 | 1·68 |

மூலங்கள்: இலங்கை சுங்கப்புள்ளி விபரங்கள், கொழும்பு தேயிலைத் தரகர் சங்கம், தேயிலைக்கட்டுப்பாட்டு அதிகாரியின் நிர்வாக அறிக்கைகள்.

சென்ற வருடத்தின் போதிருந்த 2.6 சதவீத அதிகரிப்பளவுடன் ஒப்பிடுகையில், 1963ற் தேயிலை உற்பத்தி 180 இலட்சம் இருத்தல்களால் அல்லது 3.9 சதவீதத்தால் அதிகரித்தது. எனினும், ஏற்றுமதிகள் ஆக 40 இலட்சம் இருத்தல்களாலேயே (0.9 சதவீதம்) விரிவடைந்தன. விரிவடைதலின் விகிதாச்சாரம், 1962னதும், 1961னதும், 1960னதும், அதாவது முறையே 6.1 சதவீதத்துடனும் 3.9 சதவீதத்துடனும் 6.8 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில், நன்மை பயக்கக்கூடியதாக இல்லாமலிருந்தது. கொழும்பு ஏலங்களில் விற்கப்பட்ட, தேயிலையினது சகல ரகங்களினதும் வருடாந்தச் சராசரி விலைகள், 1962ல் இருந்தவற்றுடன் ஒப்பிடுகையில், இருத்தலுக்கு 7 சதங்களாக அல்லது 4 சதவீதமாகக் குறைந்தன. இந்தக் குறைவானது தேயிலையின் மூன்று பிரதான ரகங்களையும் பாதித்தது. மத்திய பிரதேசத்திலும், தாழ்ந்த பிரதேசத்திலும் வளர்ந்தவை முறையே இருத்தலுக்கு 7 சதங்களாகவும் (4.3 சதவீதம்), இருத்தலுக்கு 3 சதங்களாகவும் (1.9 சதவீதம்) வீழ்ந்திருக்கையில், உயர்ந்த பிரதேசத்தில் வளர்ந்தவை மிகவும் அதிகமாக, அதாவது இருத்தலுக்குப் 12 சதங்களாக அல்லது 5.9 சதவீதமாக, வீழ்ச்சியுற்றன. 1962ன் தொடர்பான கால் வருடத்துடன் ஒப்பிடுகையில், உயர்ந்த பிரதேசத்தில் வளர்ந்தவைகளின் சராசரி விலைகள் வருடத்தின் ஒவ்வொரு காற்பகுதியிலும் வீழ்ச்சியுற்றன. முதலாங்காற்பகுதியின் போது, மத்திய பிரதேசத்தில் வளர்ந்தவை ஓரளவு நேர்த்தியான சீர்திருத்தத்தைக் காட்டின. ஆனால் அதன் பின்னர் முன்னேறுகின்ற வீழ்ச்சியைப் பதிவு செய்தன. சென்ற வருடத்தினது தொடர்பான காற்பகுதிகளுடன் ஒப்பிடுகையில், தாழ்ந்த பிரதேசத்தில் வளர்ந்தவை மிக நன்றாகத் தேறியிருப்பது போலப் புலப்படுகின்றது. முதல் அரையாண்டின்போது இவற்றின் கால்வருடச் சராசரி விலைகள் சிறிது சீர்திருந்தின; இரண்டாங்காற்பகுதியின் போது மற்ற இரு ரகங்களையும் விடக் கூர்மைக் குறைவாக வீழ்ச்சியுற்றன. வருடத்தின் மூன்றும் நாலாங்கால்களின் போது தேயிலையின் ஒவ்வொரு ரகத்தினதும் சராசரி விலைகளின் வீழ்ச்சி அதிகரிக்கும் உள்நாட்டுத் தேவைகளின் அழுத்தத்தையும், அத்துடன் தன்மையின் பருவ வேறுபாடுகளையும், ஓரளவு பிரதிபலிக்கின்றது. வெளித்

தோற்றத்திற்கு மட்டமான இலைபோல உள்ளதும், அல்லது நன்ருகத் தயார் செய்யாததும், கவர்ச்சியற்ற குடிவகையுமானதாக, வெறும் தேயிலைகள் சந்தையிற்புகுந்ததற்கான ஆதாரம் உள்ளதாகத் தோற்றுகின்றது. இது சிலவேளையில் விலைகளின் மீது இறக்கமான விளைவையும் கொண்டுவந்தது.

இலண்டன் ஏலங்களிலே வருடத்தின்போது விற்கப்பட்ட இலங்கைத் தேயிலைகளின் சராசரி விலை, இருத்தலுக்கு 4சி 4.33 பெ.[1] ஆக இருந்து 1962 உடன் ஒப்பிடுகையில், 3.60 பெ.களால் அல்லது 6.4 சதவீதத்தாற் குறைந்தது. அதே காலப்பகுதியில் இவ் ஏலங்களில் விற்கப்பட்ட வட இந்தியத் தேயிலைகளின் சராசரி விலையானது, இருத்தலுக்கு 4சி 7.70பெ. ஆக இருந்து, மிகக்கூர்மையாக, அதாவது 4.90 பெ.களால் அல்லது 8.1 சதவீதத்தாற், குறைந்தது. எல்லாத் தேயிலைகளுக்கும் கிடைத்த சராசரி விலை இருத்தலுக்கு 4சி. 2.65 பெ.களாக இருந்து, மிகக்குறைந்த, அதாவது, 3.15பெ. அல்லது 5.9 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

அண்மை வருடங்களில், சர்வதேசச் சந்தைகளிலே தேயிலைக்கான நிரம்பலும், கேள்வியும் மட்டுமட்டாகச் சமநிலையில் இருந்திருக்கின்றன. உலக நிரம்பல்கள் 1962ல், 16370 இலட்சம் இருத்தல்களாக[2] இருந்தன. உலக நுகர்ச்சி, 80 இலட்ச இருத்தல்கள் கொண்ட வழங்குதல்களை உட்கொள்தலுக்கு மேற்பட்ட மிகையாக விட்டு, 16290 இலட்ச இருத்தல்களாக இருந்தது. 1963ற்கான பூரண உற்பத்தித்தரவுகள் இப்பொழுதும் கிடைக்கவில்லை. ஆனுல், குறிப்புகளின்படி, இவ்வருட உலக உற்பத்தி 1962ன் உற்பத்தியை விடக்கூடியதாக இருக்கும். வட-கிழக்கு இந்தியாவிலும், இந்தோனேசியாவிலும், உற்பத்திக் குறைவுகள் இருந்திருந்தன. ஆனுல் இவை தென்னிந்தியாவினதும், இலங்கையினதும், குறைந்த அளவில் கிழக்கு ஆபிரிக்காவினதும் உற்பத்தி அதிகரிப்புகளினுல் ஈடுசெய்யப்பட்டன. பிரதான நுகர்ச்சி நாடாகிய பிரித்தானியாவுக்கு வருடத்தின் போதுள்ள இறக்குமதிகள், 1962ஐ விட 60 இலட்ச இருத்தல்கள் கொண்ட அதிகரிப்பான 5630 இலட்ச இருத்தல்களைக்[3] கொண்டிருந்தன. உட்கொள்ளுவதிற்கெதிராக நிரம்பல்களின் மிகை 1962ஐ விட 1963ல் அதிகமாக இருக்கக்கூடுமெனினும், இப்பொழுதுள்ள நிரம்பலினதும், கேள்வியினதும் அகன்ற சமநிலையை இது சீர்குலைக்கக்கூடிய அளவுக்குப் பெரியதாக இருக்க முடியாது போன்றே தோன்றுகின்றது.

இருந்த போதிலும், நீண்டகாலத்திருஷ்டியுடன் நோக்கும் போது, ஆசியாவினது வழமையான தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகள், புதிதாகத் தேயிலை உற்பத்தி செய்யும் கிழக்கு ஆபிரிக்கா, தென் அமெரிக்காப் பிரதேசங்கள், ஆகிய இரண்டிலும், உற்பத்தியின் வளர்ச்சிக்குரிய அளவு, சந்தேகமின்றி அதிகரிக்கின்றது. ஆகவே, உற்பத்தியின் அதிகரிப்புக்கு ஈடாக உலக நுகர்ச்சியும் செல்லாவிடில், முக்கியமாக வெறுந்தேயிலைகளின் மேலதிக உற்பத்தி, பிற்காலத்தில் ஒரு முக்கிய அம்சமாக இருக்கக்கூடும். இச்சந்தர்ப்பங்களில், உலகச்சந்தைகளில் இலங்கை தனது நிலையையும், போட்டியிடத்தக்க வன்மையையும் நிலைநிறுத்தவேண்டுமாயின், உற்பத்தியிற் கவனம்—(குறைந்த அளவு செலவுகளும், உயர்ந்த விளைச்சல்களும்)—அதனளவில் ஒரு பதிலைத் தரமுடியாது. உற்பத்தி செய்யப்படும் உயரங்களின் வித்தியாசம் பாராது, திறமான சிறந்த முறையிற் தயார் செய்யப்பட்ட தேயிலைகளை உற்பத்தி செய்ய வலியுறுத்துவதும் ஒரு முக்கிய குறிக்கோளாக இருத்தல் வேண்டும்.

---

(1) இலண்டன் தேயிலைத்தரகர் சங்கத்தின், இல. 604, மார்கழி 20, 1963ற்கான தேயிலைச் சந்தை அறிக்கை.
(2) சர்வதேசத் தேயிலைக்குழுவின் வருடாந்த புள்ளிவிபர சஞ்சிகைக்குத் துணையானது (ஆனி 1963).
(3) இலண்டன் தேயிலைத்தரகர் சங்கத்தின் இல. 609, தை 31, 1964ற்கான தேயிலைச்சந்தை அறிக்கை.

அட்டவணை II ஆ-4, இரப்பரது உற்பத்தியும், ஏற்றுமதிகளும், விலைகளும் பற்றிய தரவுகளைத் தருகின்றது.

## அட்டவணை II ஆ-4

### இரப்பர்-உற்பத்தியும், ஏற்றுமதிகளும், விலைகளும்

| வருடம் | உற்பத்தி பத்து இலட்சம் இருத்தல்கள் | ஏற்றுமதி பத்து இலட்சம் இருத் தல்கள் | க.ஏ.பெ. விலை இருத்தலுக்கு ரூ. சதம் | கொழும்புச் சந்தை விலை ஆர்.எஸ்.எஸ். 1ம் ரகம்இருத்தலுக்கு ரூ. சதம் |
|---|---|---|---|---|
| 1955 .. .. | 210 | 222 | 1·58 | 1·28 |
| 1956 .. .. | 214 | 193 | 1·52 | 1·45 |
| 1957 .. .. | 220 | 209 | 1·44 | 1·16 |
| 1958 .. .. | 224 | 207 | 1·25 | 0·93 |
| 1959 .. .. | 205 | 206 | 1·45 | 1·25 |
| 1960 .. .. | 218 | 235 | 1·61 | 1·24 |
| 1961 .. .. | 215 | 197 | 1·32 | 1·01 |
| 1962 .. .. | 229 | 224 | 1·29 | 0·98 |
| 1963 .. .. | 231 | 209 | 1·23 | 0·93 |

மூலங்கள்: இரப்பர் கட்டுப்பாட்டதிகாரியின் நிர்வாக அறிக்கை, இலங்கை சுங்கப்புள்ளி விபரங்கள், கொழும்பு இரப்பர் தரகர் சங்கம்.

சென்ற வருடத்துடன் ஒப்பிடுகையில், 1963ல் இரப்பர் உற்பத்தி 20 இலட்சம் இருத்தல்களால் அல்லது 0.9 சதவீதத்தால் விரிவடைந்தது. சென்ற வருடத்தின் 6.5 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில், நன்மை பயக்கக்கூடியதல்லாமல் இருந்த இச்சிறு விரிவடைதலானது ஓரளவுக்கு, குறிப்பாக வருடத்தின் கடைசி அரைப்பகுதியில் நேர்ந்த கெடுதலான வானிலை, உற்பத்தியைப் பாதித்ததன் காரணமாக ஏற்பட்டது. மறுபுறத்தில், வருடத்தின்போது ஏற்றுமதி செய்யப்பட்ட தொகை 150 இலட்ச இருத்தல்களால் அல்லது 6.7 சதவீதத்தாற் குறைந்தது.1962ன் போது இத்தொகையானது 13.7 சதவீதத்தால் விரிவடைந்தது. கொழும்புச் சந்தையில் வருடத்திற்கான ஆர்.எஸ்.எஸ். ரகம் 1 இரப்பரின் சராசரி விலை குறைந்த மட்டமான இருத்தலுக்கு 93 சதங்களையடைந்தது. இதுவே 1958க்குப்பின் மிகக் குறைந்த மட்டமாகும். 1962ம் ஆண்டில் விலையின் வீழ்ச்சி இருத்தலுக்கு 5 சதங்களாக அல்லது 5.1 சதவீதமாக இருந்தது.

வருடத்தின் அதிகமான பகுதிக்குக் கொழும்பு இரப்பர்ச் சந்தை, மந்தமானதும், இறக்கமடைந்ததுமான நிலைகளையும், இக்காலத்தின் சில வேளைகளில் ஓரளவு பிழையான நிலையையும், குணவியல்பாகக் கொண்டிருந்தது. எனினும் இப்பொதுவான நிலையிலே ஓரளவு தமது செல்வாக்கைக் குறிப்பிட்ட சம்பவங்கள் கொண்டு வந்தன. வருடத்தின் மத்திய பகுதியிலே பிரதான வல்லரசுகள் கைச்சாத்திட்ட அரைகுறையான அணு ஆயுதச் சோதனைத் தடை ஒப்பந்தம், உண்மையில் விலைகளை இளக்கியது. சித்திரைக் கடைசியில் ''சிஸ்-பொலிபராடீன்'' என்னும் தொகுப்பு இரப்பரது விலை

இருத்தலுக்கு அமெரிக்காவினது 2 டொலர்ச் சதங்களாற் குறைக்கப்பட்ட போதும், வருடத்தின் புரட்டாதி மாதத்தில் அறிவிக்கப்பட்ட வேறிரண்டு தொகுப்பு இரப்பர்களது விலைகளில் மேலும் குறைப்புக்கள் ஏற்பட்ட போதும், இயற்கை இரப்பரது விலையிலே ஓர் இறக்கமான விளைவு உண்டானது. மறுபுறத்தில் வேறுசில காரணங்கள், அதாவது, புதிதாக உருவாக்கப்பட்ட அரசாகிய மலேசியாவுக்கும் இந்தோனேசியாவிற்கும் இடையேயுள்ள அரசியற் தகராறும், பிரதான சந்தைகளிலே காலத்துக்குக்காலம் ரூசியாவின் இயற்கை இரப்பரது கொள்வனவுகளும், மற்றும்படி வீழ்ச்சியுற்று இயங்குகின்ற விலைகளைப் பலப்படுத்தின.

கடைசியாகக் கிடைத்திருக்கும், சர்வதேச இரப்பர் ஆய்வுக்குழுவின் மதிப்பீடுகளின்படி,[1] தொகுத்த இரப்பரது உலக உற்பத்தியான, 2390000 தொன்கள், இரண்டாவது தொடர்ச்சியான வருடத்திற்கு, இயற்கை இரப்பரது உலக உற்பத்தியான 2100000 தொன்களைவிட அதிகரித்திருக்கின்றன. தொகுத்த இரப்பரது உலக நுகர்ச்சியான 2317500 தொன்கள், முதன்முறையாக 2200000 தொன்கள் என மதிப்பிடப்பட்டிருக்கும் இயற்கை இரப்பரது உலக நுகர்ச்சியைக்கூட மீறிச் சென்றிருப்பதை, இம் மதிப்பீடுகள் மேலும் உணர்த்துகின்றன. மேலும், கைத்தொழில் முன்னேற்ற மடைந்த நாடுகளில், பொறித்தொகுதி உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களது அளவின் அதிகரிப்புடன் அவற்றினது விரிவடையும் எண்ணெய்ச் சுத்திகரிப்பு, நிலக்கரி—ரசாயன கைத்தொழில்கள் ஆகியன விரிவடைந்து வருதலின் பயனாலே, புதிய திண்ம இரப்பர்களின் அதிகரித்த தொகைகள் (இவை முன்னெப்போதையும் விட அகன்ற அளவு முறைகளுக்கு இயற்கை இரப்பருக்குப் பதிலாக உபயோகிக்கக்கூடியவை) இத்தேசங்களிலுள்ள நுகர்வோர்களுக்கு வர்த்தக அளவினதாகக் கிடைக்கக்கூடியபடி செய்யப்படுகின்றன.

கடந்தகாலத்தின் அகன்ற ஏற்ற இறக்கங்களுடன் ஒப்பிடுகையில், கடைசி மூன்று வருடங்களின்போது சர்வதேசச் சந்தைகளிலே இயற்கை இரப்பருக்கு கிடைத்திருந்த குறைந்த விலைகளும் அவற்றினது ஸ்திரத் தன்மையும், பெருமளவில் தொகுத்த உற்பத்திப் பொருட்களிடமிருந்துண்டாகும் அதிகரித்த பெரிய போட்டியினால் ஏற்பட்டதாகும். தங்களது உற்பத்திச் செலவுகளைக் குறைப்பதிலும், தங்களது பொருளின் தொழில்நுட்ப இயல்புகளில் மேலும் சீர்திருத்தங்கள் உண்டாக்குவதிலும், தொகுப்பு உற்பத்தியாளர்கள் பெற்றிருக்கும் ஆற்றலிற்தங்கி, உண்மையிலேயே இச்சார்புகள் எதிர்காலத்தில் கூடிய வேகமுள்ளவையாக இருக்கக்கூடும். அத்துடன் இயற்கை இரப்பரது விலைமேலும் வீழ்ச்சியடையவும் கூடும். தொகுப்பு இரப்பரது தொழிற்சாலை உற்பத்தி, பெருந்தோட்ட உற்பத்தி போலல்லாது, கேள்வியின் மாற்றங்களுக்கு ஏற்ப உடனடியாகத் திருத்தியமைக்கப்படக் கூடியவையானபடியால், எதிர்கால விலைகள் எவ்வாறெனினும் கூடிய நிலைபேறுள்ளவையாக இருக்கும்.

---

1. சர்வதேச இரப்பர்த் தீர்ப்புச் சுருக்கம், தை 1964, பக்கம் 98.

தெங்குப் பொருட்கள்

அட்டவணை II ஆ-5 பிரதான தெங்குப் பொருட்கள் மூன்றினதும் ஏற்றுமதிகளும், விலைகளும் பற்றிய தரவுகளைக் கொடுக்கின்றது.

### அட்டவணை II ஆ-5

### பிரதான தெங்குப்பொருட்களின் ஏற்றுமதி அளவுகளும் விலைகளும்

| வருடம் | கொப்பரா | | தேங்காயெண்ணெய் | | தேங்காய்த்துருவல் | |
|---|---|---|---|---|---|---|
| | அளவு ஆயிரம் அந்தர் | க.ஏ.பெ. விலை அந்தருக்கு ரூ. ச. | அளவு ஆயிரம் அந்தர் | க.ஏ.பெ. விலை அந்தருக்கு ரூ. ச | அளவு ஆயிரம் அந்தர் | க.ஏ.பெ. விலை அந்தருக்கு ரூ. ச. |
| 1955 .. | 1,367 | 41·90 | 1,945 | 58·26 | 1,157 | 47·36 |
| 1956 .. | 1,155 | 42·43 | 1,698 | 58·42 | 1,275 | 50·86 |
| 1957 .. | 695 | 47·95 | 1,081 | 62·80 | 978 | 56·08 |
| 1958 .. | 554 | 52·97 | 887 | 69·80 | 1,135 | 63·72 |
| 1959 .. | 852 | 60·52 | 1,389 | 84·41 | 1,050 | 71·45 |
| 1960 .. | 583 | 55·23 | 1,110 | 71·83 | 1,099 | 65·23 |
| 1961 .. | 1,100 | 43·47 | 1,837 | 58·16 | 967 | 49·23 |
| 1962 .. | 1,448 | 40·74 | 2,043 | 54·97 | 981 | 57·23 |
| 1963 .. | 862 | 45·55 | 1,621 | 61·04 | 967 | 62·09 |

மூலம்: இலங்கை சுங்கப்புள்ளி விபரங்கள்.

முன்னர் பார்த்தது போல, பிரதான தெங்குப் பொருட்கள் மூன்றினதும் ஏற்றுமதிகளின் மொத்தத் தொகுதி, இவ்வருடத்தின் போது தீட்சணமாக வீழ்ச்சியுற்றது. இவ்வீழ்ச்சி, முக்கியமாகப் பாதகமான வானிலை காரணமாக ஏற்பட்ட தெங்கு உற்பத்திக் குறையைப் பிரதிபலித்தது. ஆயினும் மூன்று பொருட்களினதும் ஏற்றுமதிகள் ஒரேயளவாகப் பாதிக்கப்படவில்லை. கொப்பரா மிகத் தீட்சணமான வீழ்ச்சியால் (அதாவது 40.5 சதவீதம் அல்லது 586,000 அந்தர்) பாதிக்கப்பட்டிருக்கையில், தேங்காயெண்ணெயின் ஏற்றுமதிகள் 20.7 சதவீதத்தால் (422,000 அந்தர்) வீழ்ச்சியுற்றன. 1.4 சதவீதம் (14,000 அந்தர்) கொண்ட தேங்காய்த் துருவலினது ஏற்றுமதிகளின் வீழ்ச்சி, அசட்டை செய்யத்தக்கதாக அமைந்துள்ளது.

இப்பொருட்கள் மூன்றினதும் விலைகள் சென்ற வருடத்திலுள்ளவற்றை விட குறிப்பிடத்தக்க திருத்தத்தைக் காட்டின. கொப்பராவினதும், தேங்காயெண்ணெயினதும், தேங்காய்த்துருவலினதும் அந்தருக்கான கப்பலில் ஏற்றப்பட்டவரையுள்ள சராசரி விலைகள், முறையே, 11.8 சதவீதத்தாலும் (ரூ. 4.81) 11.0 சதவீதத்தாலும் (ரூ. 6.07) 8.5 சதவீதத்தாலும் (ரூ. 4.86) அதிகரித்தன. 1963ம் ஆண்டு, கொழும்புச்சந்தையிலே கொப்பரா, தேங்காயெண்ணெ ஆகிய இரண்டும் உறுதியான நோக்குடனும், சென்ற வருடத்திலிருந்தவற்றைவிட நன்கு உயர்ந்த விலைகளுடனும் காணப்பட்டன. உண்மையிலேயே, ஒவ்வொரு கால்வருடத்திலுமுள்ள விலைகள், இத்துடன் தொடர்பான திருத்தத்தைத் தொடர்ச்சியாக நிலைநாட்டின. 1962ன் காற் பகுதிகளுடன் ஒப்பிடுகையில், வழங்குதல்கள் கிடைக்கக்கூடிய அளவிலுள்ள குறைவானது, விலைகளுக்குக் கணிசமான அளவு ஆதரவு

கொடுத்தது. புரட்டாதியிலிருந்து இருபண்டங்களினதும் விலைகள் மிகத் தீட்சணமாக உயர்ந்தன. இத்திருத்தம் கிட்டத்தட்ட வருட முடிவுவரை நிலைத்தது. வருடமுடிவின்போது விலைகள் வீழ்ச்சியடைவதற்கான தன்மைகள் காணப்பட்டன. 1-ம் இலக்கத் தோட்டத்தின் கொப்பரா, 1962லிருந்த ரூபா 19.36 அல்லது 13.0 சதவீத திருத்தத்திற்கு மேலாக, 1963ம் ஆண்டில் வருடாந்தச் சராசரி விலையாகிய 'கண்டிக்கு' ரூபா 168.12 பெறக்கூடியதாக விளங்கியது. வருடத்திற்கான தேங்காயெண்ணெயின் சராசரி விலை 1962ன் ரூபா 133.19 அல்லது 14.9 சதவீதத்திற்கு மேலதிகமான, தொன்னுக்கு ரூபா 1028.74 ஆக அமைந்தது.

எண்ணெய்விதைகளுக்கும், எண்ணெய்களுக்கும், கொழுப்புகளுக்குமான, சர்வதேசச் சந்தைகளிலே நிலவுகின்ற, நிரம்பலினதும், கேள்வியினதும் முக்கியமான போக்குகளை இவ்விலைகள் பிரதிபலித்தன. 1962 உடன் ஒப்பிடுகையில், 11.96 பவுண்கள் அல்லது 13.2 சதவீத அதிகரிப்பைக் காட்டி, இலங்கைத் தேங்காயெண்ணெ இலண்டன் சந்தையிலே வருடத்திற்கான தொன்னுக்கு 102.62 பவுண்களாகிய சராசரி கொ.கா.க. விலையைப் பெற்றது. மத்திய தரைப்பிரதேசத்தில் ஒலிவ் எண்ணெய் நிரம்பல்களைக் கடுமையாகக் குறைத்தபடியால், மென்மைத்தன்மையுடைய எண்ணெய்களினது உலக உற்பத்தியின் 1963ல் ஏற்பட்ட மிகப் பொதுவான வீழ்ச்சி, வருடத்தின் ஆரம்பத்தின்போது, உட்கொள்ளத்தக்க தாவர எண்ணெய்களின் விலைகள் பொதுவாக உறுதியடைவதற்கு வழிவகுத்தது. ஒலிவ் எண்ணெயின் உற்பத்திக் குறையை ஈடு செய்வதற்கு ஐரோப்பாவினது கேள்வியில் ஒரு அதிகரிப்பு உண்டானதுடன், விலையினது அதிகரிப்பானது, குறிப்பாக ''சோயா அவரை எண்ணெய்'', பிரதான மென்மைத்தன்மையுடைய எண்ணெய் ஆகியவற்றைப் பாதித்தது. எவ்வாறெனினும் இதன் பின்னர், ஆண்டினது முதலாவது அரைப்பகுதியிலே ஐக்கிய அமெரிக்க நாடுகளிலுள்ள ''சோயா அவரை எண்ணெய்யின்'' பெரியதும் அதிகரிப்பதுமான கையிருப்புகளுடனும், உருசியாவினது சூரிய காந்திவிதை எண்ணெய்யின் எப்பொழுதுமில்லாத பெருமளவினதான ஏற்றுமதிகளுடனும், இந்தியாவிலிருந்து வந்த நிலக்கடலை எண்ணெய்யுடனும், விலைகள் இளகத் தொடங்கின. ஐக்கிய அமெரிக்க நாடுகளிடமிருந்து பெற்ற உருசியாவினது கோதுமைக் கொள்வனவுகள், தாவர எண்ணெய் கொள்வனவுகளுக்கும் கூட வழிவகுக்கும் என்ற நம்பிக்கையைத் தொடர்ந்தும் கிழக்கு ஐரோப்பிய பகுதியைச் சேர்ந்த நாடுகளில் சூரியகாந்தி விதையிலும் ஏனைய எண்ணெய் விதை உற்பத்தியிலும் அறிவிக்கப்பட்ட குறைவு காரணமாகவும் அநேகமான தாவர எண்ணெய்களினது விலைகள், வருடத்தின் கடைசிக்காற் பகுதியிற் தீட்சணமான அதிகரிப்புகளைக் காட்டின. எவ்வாறு, கடைசியிற் கூறப்பட்ட கொள்வனவுகள் நடைபெறத் தவறிவிட்டன. இதனல் விலைகள் வருடமுடிவின் போது பாதகமாக எதிர்த்தாக்கம் செய்தன.

குறிப்பிடும்படியான சில காரணிகள் கொப்பராவுக்கும், தேங்காயெண்ணைக்குமான நிரம்பலையும் கேள்வியையும், பாதித்தன. சிறப்பாக, பிலிப்பைனிற் கெடுதலான வானிலை தெங்கு உற்பத்தியைப் பாதிக்கிறது என்ற அறிவித்தலுக்கிடையேயும்கூட, வருடத்தின் அதிகமான பகுதிக்குக் குறைந்த மட்டத்திலிருந்த, 'ஐரோப்பாவினது தெங்குப் பொருட்களின் கையிருப்புக்கள் (இவை 1962ன் போது கணிசமான அளவு பயன்படுத்தப்பட்டன) விலைகளை நிலையாக வைத்திருக்க உதவின. வருடத்தின் பிற்பகுதியில் மலேசியாவுக்கான இந்தோனேசியாவின் கொப்பரா ஏற்றுமதிகளின் இடை நிறுத்துகையும், அதன் விளைவாக மலேசியா கொப்பராவினதும் தேங்காயெண்ணெயினதும் ஏற்றுமதிகளின்மேல் விதித்த தடையும் சேர்ந்து, விலைகளின் மீது நன்மையான விளைவைக் கொண்டிருந்தன. ஆயினும், பிலிப்பைனிற் கெடுதலான வானிலை உற்பத்தியைப் பாதிக்கிறதென்ற அறிக்கைகள் உண்மையில் நடைபெற்ற சம்பவங்களாற் பொய்ப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதற்குச் சான்று உள்ளது போல் வருடமுடிவின்போது தென்பட்டதுடன், உண்மையிலேயே வருடத்தினது முடிவு மாதங்களின் போது, அந்நாட்டு ஏற்றுமதிகள் அதிகரித்தன. இவ்வுண்மையுடன் சேர்ந்து, ஐரோப்பிய கையிருப்புக்களின் உயர்ந்து வரும் மட்டமும், விலைகளை இறக்க எத்தனித்தது.

## இறக்குமதிகள்

அட்டவணை II ஆ-6, தேர்ந்தெடுக்கப்பட்ட இறக்குமதிகளைப் பிரதான தொகுதிகளின்படியும், பண்டங்களின்படியும், அல்லது பண்டத் தொகுதிகளின்படியும் தருகின்றது.

### அட்டவணை II ஆ-6
### பிரதான தொகுதிகளின்படியும், பண்டங்களின்படியும் அல்லது பண்டத்தொகுதிகளின்படியும், தேர்ந்தெடுக்கப்பட்ட சில பொருட்களின் இறக்குமதிகள் 1959-1963

| | பெறுமானம் பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | | மொத்த இறக்குமதிகளின் சதவீதமாக | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 | 1959 | 1960 | 1961 | 1962 | 1963 |
| **1. நுகர்ச்சிப் பொருட்கள்** | **1,136** | **1,110** | **908** | **848** | **752** | **56·7** | **56·6** | **53·3** | **51·1** | **50·1** |
| (அ) உணவும் குடிவகைகளும் | | | | | | | | | | |
| (i) அரிசி | 283 | 242 | 217 | 195 | 192 | 14·1 | 12·3 | 12·7 | 11·7 | 12·8 |
| (ii) கோதுமைமா | 106 | 65 | 70 | 71 | 60 | 5·3 | 3·3 | 4·1 | 4·3 | 4·0 |
| (iii) சீனி | 75 | 79 | 78 | 58 | 71 | 3·7 | 4·0 | 4·6 | 3·5 | 4·7 |
| (iv) பாலும், பாற்பொருட்களும் | 76 | 70 | 65 | 74 | 76 | 3·8 | 3·6 | 3·8 | 4·5 | 5·1 |
| (v) இறைச்சி, மீன், முட்டை | 94 | 111 | 72 | 56 | 62 | 4·7 | 5·7 | 4·2 | 3·4 | 4·1 |
| (vi) கடலை, பருப்பு, கறிச்சரக்குகள் | 92 | 102 | 104 | 111 | 110 | 4·6 | 5·2 | 6·1 | 6·7 | 7·3 |
| (vii) குடிவகைகளும் தயாரிக்கப்பட்ட புகையிலையும் | 14 | 14 | 9 | 5 | 5 | 0·7 | 0·7 | 0·5 | 0·3 | 0·3 |
| (ஆ) ஆடைவகைகள் (உடைகள் உட்பட, ஆனால் நெசவுநூல், தையல்நூல் நீக்கி) | 189 | 207 | 183 | 161 | 93 | 9·4 | 10·6 | 10·7 | 9·7 | 6·2 |
| (இ) ஏனைய நுகர்ச்சிப்பொருட்கள் | | | | | | | | | | |
| (i) மோட்டோர் கார்கள் | 50 | 53 | 8 | 2 | 2 | 2·5 | 2·7 | 0·5 | 0·1 | 0·1 |
| (ii) கடிகாரங்கள் | 16 | 29 | — | — | ... | 0·8 | 1·5 | — | — | ... |
| (iii) வானொலிப் பெட்டிகள் | 10 | 12 | 3 | 1 | ... | 0·5 | 0·6 | 0·2 | 0·1 | ... |
| (iv) இரப்பர் ரயர்களும், ரியூப்களும் | 25 | 20 | 21 | 24 | 23 | 1·2 | 1·0 | 1·2 | 1·4 | 1·5 |
| (v) மருந்துகளும், மருந்துப்பொருட்களும் | 32 | 32 | 27 | 25 | 21 | 1·6 | 1·6 | 1·6 | 1·5 | 1·4 |
| **2. நடுத்தரமான பொருட்கள்** | **370** | **380** | **359** | **370** | **346** | **18·5** | **19·4** | **21·1** | **22·3** | **23·1** |
| (i) உரம் | 61 | 58 | 57 | 60 | 68 | 3·0 | 2·9 | 3·3 | 3·6 | 4·5 |
| (ii) நிலஎரி எண்ணெய்ப்பொருட்கள் | 132 | 118 | 126 | 125 | 117 | 6·6 | 6·0 | 7·4 | 7·5 | 7·8 |
| (iii) நிலக்கரி | 11 | 17 | 9 | 9 | 9 | 0·5 | 0·9 | 0·5 | 0·5 | 0·6 |
| (iv) தயாரிக்கப்படாத புகையிலை | 11 | 11 | 13 | 10 | 6 | 0·5 | 0·6 | 0·8 | 0·6 | 0·4 |
| (v) நெசவுநூலும், தையல்நூலும் | 21 | 25 | 23 | 22 | 13 | 1·0 | 1·3 | 1·4 | 1·3 | 0·9 |
| vi) காகிதமும் காகித மட்டையும் | 34 | 39 | 33 | 32 | 27 | 1·7 | 2·0 | 1·9 | 1·9 | 1·8 |
| vii) இரசாயனப் பொருட்கள் | 13 | 15 | 15 | 16 | 15 | 0·6 | 0·8 | 0·9 | 1·0 | 1·0 |
| (viii) சாயப்பொருட்களும், வர்ணப்பொருட்களும் | 13 | 12 | 11 | 15 | 10 | 0·6 | 0·6 | 0·6 | 0·9 | 0·7 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்*** | **292** | **290** | **287** | **303** | **281** | **14·6** | **14·8** | **16·9** | **18·3** | **18·7** |
| (i) கட்டட ஆக்கப்பொருட்கள் | 74 | 83 | 76 | 90 | 67 | 3·7 | 4·2 | 4·5 | 5·4 | 4·5 |
| (ii) போக்குவரத்து சாதனங்கள் | 114 | 102 | 97 | 91 | 101 | 5·7 | 5·2 | 5·7 | 5·5 | 6·7 |
| (iii) இயந்திரங்களும் உபகரணங்களும் | 87 | 89 | 104 | 110 | 108 | 4·3 | 4·5 | 6·1 | 6·6 | 7·2 |
| **4. மேலுள்ள விடயங்களின் மொத்தம் (விடயங்கள் 1+2+3)** | **1,798** | **1,780** | **1,554** | **1,521** | **1,379** | **89·7** | **90·8** | **91·2** | **91·6** | **91·9** |
| **5. பகுக்கப்படாத இறக்குமதிகள்** | **207** | **180** | **150** | **139** | **121** | **10·3** | **9·2** | **8·8** | **8·4** | **8·1** |
| **6. சகல இறக்குமதிகளினதும் மொத்தம்** | **2,005** | **1,960** | **1,703** | **1,660** | **1,500** | **100·0** | **100·0** | **100·0** | **100·0** | **100·0** |

மூலம்: இலங்கை சுங்கப்புள்ளி விபரங்கள்.

*இப்பகுதியிலுள்ள அதிகரிப்புக்கு இடங்கொடுத்து, 1959ம் ஆண்டு தொடங்கி 1962ம் ஆண்டு வரையுள்ள தரவுகள் திருத்தியமைக்கப்பட்டிருக்கின்றன.

1962ல், ரூபா 430 இலட்சங்களால் அல்லது 2.5 சதவீதத்தால் வீழ்ச்சியுற்ற இறக்குமதிகளைவிட, 1963ன் போது, ரூபா 1600 இலட்சங்களால் அல்லது 9.6 சதவீதத்தால் ஏற்பட்ட மொத்த இறக்குமதிகளின் வீழ்ச்சி அதிதீட்சணமாக இருந்தது. ''நுகர்ச்சிப்பொருட்கள்'' பகுப்பினது ''உணவும், குடிவகைகளும்'' என்ற தொகுதியில், இறக்குமதி உத்தரவுச்சீட்டுக் கட்டுப்பாட்டுக்கு உட்படாத, மூன்று பிரதான அரசாங்க இறக்குமதிகளாகிய அரிசியினதும், கோதுமைமாவினதும், சீனியினதும் மொத்தப் பெறுமானம், சென்ற வருடத்தின் விகிதாச்சாரமாகிய 19.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில், 1963ம் ஆண்டின் இறக்குமதிகளில் ரூபா 3230 இலட்சங்களாக[1] அல்லது 21.5 சதவீதமாக இருந்தது. இவ்விறக்குமதிகள், கடந்த வருடத்தில் 10 இலட்ச ரூபாய்களைக் கொண்ட ஓர் சாதையான வீழ்ச்சியைப் பிரதிபலித்தன. இத்தொகுதியின் ஏனைய விடயங்களிற் ''பாலும் பாற்பொருட்களும்'' என்ற விடயம், ரூபா 20 இலட்சங்கள் அல்லது 2.7 சதவீத அதிகரிப்பைக் காட்டிற்று. ''இறைச்சி மீன், முட்டை'' என்ற விடயம் மிகத் தீட்சணமாக, அதாவது ரூபா 60 இலட்சங்களால் அல்லது 10.7 சதவீதத்தால் அதிகரித்தது. ''குடிவகைகளும், தயாரிக்கப்பட்ட புகையிலையும்'' என்ற விடயத்தின் இறக்குமதிகள், சென்ற வருடத்தினது மட்டத்திலிருந்து மாற்றமொன்றும் காட்டவில்லை.

நுகர்ச்சிப் பொருட்களின் ஏனைய இரண்டு தொகுதிகளுக்குள்ளே மிகவும் கவனிக்கத்தக்க சம்பவமானது ஆடைவகைகளின் இறக்குமதிகளிலுள்ள அதிதீட்சணமான வீழ்ச்சியாகும். இவை, ரூபா 680 இலட்சங்களால் அல்லது 42.2 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றன. உண்மையில், இதுவே எந்தப் பிரதான பண்டத்தினதோ அல்லது பண்டங்களின் தொகுதியினதோ, பதிவு செய்யப்பட்ட மிகத்தீவிர, தீட்சணமான, வீழ்ச்சியாகும். முன்பு அவதானித்தபடி, இவ்விறக்குமதிகளின் தொகுதி 43.2 சதவீதமாகக் குறைந்தது. மொத்த இறக்குமதிகளுக்கு ஆடைகளின் விகிதசமம், கடந்த நான்காண்டுகளுக்கான சராசரியான 10.1 சதவீதத்திலிருந்து, 6.2 சதவீதத்திற்கு வீழ்ந்தது. இங்கு, 1963தான், ஆடைகளின் இறக்குமதிகளினது பெறுமானம் குறைக்கப்பட்ட மூன்றாவது தொடர்ச்சியான வருடம், எனவும் கூறலாம். 1961னதும், 1962னதும் கழிவுகள் முறையே 11.6 சதவீதமும் 12.0 சதவீதமுமாகும். இக்கடைசி வருடங்களின் போது, இறக்குமதிகளின் தொகுதி, வங்கியின் குறிகாட்டிகளின்படி, முறையே, 12.8 சதவீதத்தாலும் 1.3 சதவீதத்தாலும் வீழ்ச்சியுற்றது.

சென்ற வருடத்துடன் ஒப்பிடுகையில், நுகர்ச்சிப் பொருட்களின் மொத்தப் பெறுமானம், ரூபா 960 இலட்சங்களால் அல்லது 11.3 சதவீதத்தால், வீழ்ச்சியுற்றது. 1959ல் இருந்து வீழ்ச்சியுறுவதற்கான தன்மையைக் காட்டிய மொத்த இறக்குமதிகளில் இதன் பங்கு 1963ன் போது மேலும் குறைந்தது. சென்ற வருடத்திலிருந்த 51.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் இது 50.1 சதவீதமாக இருந்தது.

''நடுத்தரமான பொருட்கள்'' பகுப்பிலே, ''நெசவுநூலும் தையல் நூலும்'' இறக்குமதிகளின் வீழ்ச்சி, ஏறக்குறைய ஆடைவகைகளினது இறக்குமதிகளின் வீழ்ச்சிக்கு நிகராக இருந்தது. இவ்விறக்குமதிகள் 40.9 சதவீதத்தால் அல்லது ரூபா 90 இலட்சங்களால் வீழ்ச்சியுற்றன. இப்பகுப்பினது ஏனைய தீட்சணமான வீழ்ச்சிகள், ''சாயப் பொருட்களும் வர்ணப் பொருட்

1. 57ம் பக்கத்தில் அடிக்குறிப்பு ஒன்றில் விளக்கப்பட்டுள்ளபடி, அரிசி, கோதுமைமா, சீனி ஆகியவற்றின் இறக்குமதிகளைப் பற்றிய சுங்கத்தரவுகளுக்கும், வருடத்தின் போதுள்ள, அரசாங்கத்தினது இப்பண்டங்களின் உண்மையான இறக்குமதிகளுக்கும், கணிசமான அளவு வேற்றுமைகள் இருக்கக்கூடும். இப்பண்டங்களினது விலைகளினதும், செலவுகளினதும், இதற்கு மேலான தரவுகள், அரசாங்க நிதியின் பிரிவு (ஏ)யிற் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

களும்'', ''தயாரிக்கப்படாத புகையிலை'' ஆகியவற்றில் ஏற்பட்ட வீழ்ச்சி களைக் கொண்டிருந்தன. இவை முறையே ரூபா 50 இலட்சங்களாலும், (33.3 சதவீதம்) ரூபா 40 இலட்சங்களாலும் (40.0 சதவீதம்) வீழ்ச்சி யுற்றன. ''காகிதமும், காகித மட்டையும்'' ''நிலஎரி எண்ணெய்ப்பொருட் கள்'' ஆகியவற்றின் இறக்குமதிகள், கூர்மைக்குறைவாக, அதாவது முறை யே ரூபா 50 இலட்சங்களாலும் (15.6 சதவீதம்) ரூபா 80 இலட்சங்களாலும் (6.4 சதவீதம்), வீழ்ச்சியுற்றன. இப்பகுப்பிற் கண்டிருந்த ஒரே ஒரு அதி கரிப்பு ''உரம்'' இறக்குமதிகளுக்கானதாகும். இவை ரூபா 80 இலட்சங் களால் அல்லது 13.3 சதவீதத்தால் அதிகரித்தன.

நடுத்தரமான பொருட்களின் மொத்தப் பெறுமானம், நுகர்ச்சிப் பொருட்களைவிட மிகக்குறைவான தீட்சணத்துடன், அதாவது ரூபா 240 இலட்சங்களால் அல்லது 6.5 சதவீதத்தால், வீழ்ச்சியுற்றது. மொத்த இறக்குமதிகளில் இதன் பங்கு 1962லிருந்த 22.3 சதவீதத்துடன் ஒப்பிடு கையில், அண்மை வருடங்களிற் காணப்பட்ட தனது தளரா அதிகரிப்பைத் தொடர்ந்து, 23.1 சதவீதமாக விளங்கியது.

''முதலீட்டப் பொருட்கள்'' பகுப்பிலே, ''கட்டட ஆக்கப் பொருட் கள்'' ரூபா 230 இலட்சங்களால் (25.6 சதவீதம்) கடுமையாக வீழ்ச்சி யுற்றிருக்கும்போது, ''போக்குவரத்துச் சாதனங்களின்'' இறக்குமதிகள் ரூபா 100 இலட்சங்களால் (11.0 சதவீதம்) அதிகரித்தன. ''இயந்திரங் களும் உபகரணங்களும்'' என்ற விடயம் ரூபா 20 இலட்சங்களால் அல்லது 1.8 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது.

முதலீட்டப்பொருட்களின் மொத்தப்பெறுமானம், சென்ற வருடத் துடன் ஒப்பிட்டு நோக்குகையில், 220 இலட்சம் ரூபாய்களால் அல்லது 7.3 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. மொத்த இறக்குமதிகளில் அதன் பங்கு, சென்ற வருடத்திலிருந்ததை (அதாவது 18.3 சதவீதத்தை) விடச்சற்றுக் கூடியதாகிய 18.7 சதவீதமாக விளங்கியது.

## வர்த்தக அமைப்பு

பின்னிணைப்பு IIல் உள்ள அட்டவணை 36, பிரதான பிரதேசங்களின் படியும், நாணயப் பிரதேசங்களின்படியும் உள்ள வர்த்தக அமைப்பைக் காட்டுகின்றது.

பிரதான நாணயப் பிரதேசங்களுள், ஸ்டேர்லிங் பிரதேசம், இலங்கை யினது வெளிநாட்டு வர்த்தகத்தில் அரைப் பங்குக்குச் சிறிது மேற்பட்ட வற்றுக்குத் தொடர்ந்தும் வகை கூறுகின்றது. இலங்கையின் ஏற்றுமதிகளுள் அதன் பங்கு 1962ல் இருந்ததைவிட 4.3 சதவீதத்தால் அதிகரித்து 58.1 சதவீதமாக விளங்கியது. இறக்குமதிகள் வழங்குவதாக உள்ள அதனது பங்கு 49.2 சதவீதமாக, அல்லது சென்ற வருடத்திலிருந்ததைவிட 9.7 சதவீதத்தால் குறைவுற்றதாக இருந்தது. அப்பிரதேசத்திற்கான ஏற்றுமதி கள் 9909 இலட்சம் ரூபாய்களிலிருந்து 0.7 சதவீதத்தால் அதிகரித்திருக் கையில், அப்பிரதேசத்திலிருந்து பெற்ற இறக்குமதிகள், 7384 இலட்ச ரூபாய்களிலிருந்து 18.4 சதவீதத்தாற் தீட்சணமாக வீழ்ச்சியுற்றன. அப் பிரதேசத்தினுடனுள்ள வர்த்தக மிகை 2525 இலட்ச ரூபாய்களாக விளங் கியது. இது சென்ற வருடத்திலிருந்த மிகையை விட 1738 இலட்ச ரூபாய் கள் கொண்ட ஒரு தீட்சணமான அதிகரிப்பாகும். டொலர்ப் பிரதேசத்திற் கான ஏற்றுமதிகள் 2226 இலட்ச ரூபாய்களிலிருந்து 6.4 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றிருக்கையில், இறக்குமதிகள் 14.8 சதவீத அதிகரிப்புடன் 712 இலட்ச ரூபாய்களாக விளங்கின. இப்பிரதேசத்துடனுள்ள இலங்கையினது மீண்டு வரும் வர்த்தக மிகை 1514 இலட்ச ரூபாய்களிலிருந்து, சென்ற வருட மிகையுடன் ஒப்பிடுகையில் 245 இலட்ச ரூபாய்களால் வீழ்ச்சியுற்றது.

இலங்கையின் ஏற்றுமதிகளுள் சாம்ராட்சிய நாடுகளின் பங்கு 54.5 சதவீதமாக விளங்கியது. இது 1962லிருந்ததைவிட 2.3 சதவீத அதிகரிப்புடன் கூடியதாகும். இறக்குமதிகளில் அதன் பங்கு 42.6 சதவீதத்திலிருந்து 1.6 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. சாம்ராட்சிய நாடுகளுக்கான ஏற்றுமதிகள், 1.2 சதவீத சிறு வீழ்ச்சியோடு கூடி, 9294 இலட்ச ரூபாய்களாக விளங்கின. சாம்ராட்சிய நாடுகளிலிருந்து பெறப்பட்ட 6385 இலட்ச ரூபாய்களாக விளங்கிய இறக்குமதிகள், அதிவேகமாக, அதாவது 11.1 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றன. சாம்ராட்சிய நாடுகளுடனுள்ள இலங்கையினது வர்த்தக மிகை, 1962லிருந்த மிகையைவிட 688 இலட்ச ரூபாய்களால் அதிகரித்து, 2909 இலட்ச ரூபாய்களாக விளங்கியது.

ஐரோப்பிய பொருளாதார சமுதாயத்திற்கான ஏற்றுமதிகள் 1572 இலட்ச ரூபாய்களாக விளங்கின. இவை, சென்ற வருடத்திலிருந்தவற்றுடன் ஒப்பிடுகையில், 1.6 சதவீத உயர்ச்சியுடன் கூடியவையாகும். இச்சமுதாயத்திலிருந்து வந்த இறக்குமதிகள், 1664 இலட்ச ரூபாய்களாக விளங்கி, 4.9 சதவீத வீழ்ச்சியைக் காட்டின. ஏற்றுமதிகளுள்ளும், இறக்குமதிகளுள்ளும் இச்சமுதாயத்திற்கிருக்கும் பங்கானது, முறையே 9.2 சதவீதமாகவும் 11.1 சதவீதமாகவும் இருந்து, 4.5 சதவீதத்தாலும், 5.7 சதவீதத்தாலும் உயர்ந்தது. இச்சமுதாயத்துடனுள்ள இலங்கையினது வர்த்தகக் குறை, 1962ல் 201 இலட்ச ரூபாய்களாக விளங்கி, இவ் வருடத்தின்போது, 92 இலட்ச ரூபாய்களாகக் குறைக்கப்பட்டது. ஐரோப்பிய கட்டில்லாத வர்த்தக சங்கத்தைச் சேர்ந்த நாடுகளுக்கான ஏற்றுமதிகள், 5327 இலட்ச ரூபாய்களாக இருந்து, சென்ற வருடத்திலிருந்தவற்றுடன் ஒப்பிடுகையில் 2.2 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றன. இந்நாடுகளிலிருந்து வந்த இறக்குமதிகள், 3216 இலட்ச ரூபாய்களாக இருந்து, மேலும் அதிகரித்த தீட்சணத்துடன், அதாவது 17.9 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றன. இந்நாடுகளுடன் உள்ள இலங்கையினது வர்த்தக நிலுவை 2111 இலட்ச ரூபாய்களாகிய மிகையைப் பதிவு செய்தது. இது சென்ற வருடத்திலும் பார்க்க, 581 இலட்ச ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பாகும்.

ஆசியாவினதும், தூரகிழக்கு நாடுகளினதும் பொருளாதார ஆலோசனைச் சபையைச் சேர்ந்த நாடுகளுக்கான ஏற்றுமதிகள், 2357 இலட்ச ரூபாய்களாக இருந்து 19.8 சதவீதத்தாற் தீட்சணமாக வீழ்ச்சியுற்றன. இப்பிரதேசத்திற்கான ஏற்றுமதிகளின் பங்கும், சென்ற வருடத்திலிருந்த 16.6 சதவீதத்திலிருந்து 13.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது. இப்பிரதேசத்தில், இலங்கையின் முக்கிய வாடிக்கைகாரர்களாக உள்ள சீனு, இந்தியா, ஜப்பான் ஆகிய மூன்று நாடுகளும், இப்பிரதேசத்திற்கு இலங்கை ஏற்றுமதி செய்த பொருட்களின் மொத்தப் பெறுமானத்தில் முறையே 42.7 சதவீதமானவைக்கும், 21.3 சதவீதமானவைக்கும், 16.5 சதவீதமானவைக்கும் வகைதந்தன. இப்பிரதேசத்திலிருந்து வந்த இறக்குமதிகளின் பெறுமானம், 6276 இலட்ச ரூபாய்களாக இருந்தது. இது, சென்ற வருடத்திலிருந்ததுடன் ஒப்பிடுகையில், 13.3 சதவீத வீழ்ச்சியைக் கொண்டதாகும். இறக்குமதிகளுள் இப்பிரதேசத்தின் பங்கு, 1962லிருந்த 43.6 சதவீதத்திலிருந்து இவ்வருடத்தின்போது 41.8 சதவீதத்திற்குக் குறைவுற்றது. இப்பிரதேசத்திலிருந்து வந்த மொத்த இறக்குமதிகளில், மூன்று பிரதான நாடுகளாக, இந்தியா 23.8 சதவீதமானவற்றையும், பர்மா 18.0 சதவீதமானவற்றையும், ஜப்பான் 15.9 சதவீதமானவற்றையும் அளித்தன. இப்பிரதேசத்துடனுள்ள இலங்கையினது வழமையான, பாதகமான வர்த்தக நிலுவை 3919 இலட்ச ரூபாய்களாக இருந்தது. இது, 1962லிருந்ததிலும் பார்க்க 377 இலட்ச ரூபாய்கள் கொண்ட சீர்திருத்தமாகும்.

**சீனாவுடன் இலங்கை நடாத்திய வர்த்தகம்**

சீனாவுடன் இலங்கை நடாத்திய வர்த்தகம் சம்பந்தமான விபரங்களை அட்டவணை II ஆ-7 காட்டுகின்றது.

**அட்டவணை II ஆ-7**

**சீனாவுடன் இலங்கை நடாத்திய வர்த்தகம்**

| வருடம் | ஏற்றுமதிகள் | | இறக்குமதிகள்* | | வர்த்தக நிலுவை (பத்து இலட்சம் ரூபா) |
|---|---|---|---|---|---|
| | பெறுமானம் (பத்து இலட்சம் ரூபா) | மொத்த உள்நாட்டு ஏற்றுமதிகளின் சதவீதமாக | பெறுமானம் (பத்து இலட்சம் ரூபா) | மொத்த இறக்குமதிகளின் சதவீதமாக | |
| 1956 .. .. | 182 | 11·0 | 134 | 8·2 | +48 |
| 1957 .. .. | 167 | 10·5 | 84 | 4·6 | +83 |
| 1958 .. .. | 78 | 4·7 | 152 | 8·8 | −74 |
| 1959 .. .. | 78 | 4·6 | 150 | 7·5 | −72 |
| 1960 .. .. | 121 | 6·6 | 132 | 6·8 | −12 |
| 1961 .. .. | 83 | 4·9 | 35 | 2·0 | +48 |
| 1962 .. .. | 133 | 7·5 | 41 | 2·5 | +92 |
| 1963 .. .. | 101 | 5·9 | 138 | 9·2 | −37 |

மூலம்: இலங்கை சுங்கப்புள்ளி விபரங்கள்.

*சீனாவுடன் செய்துகொண்ட வர்த்தக—சென்மதி உடன்படிக்கையின் கீழ் பர்மாவிலிருந்து பெற்ற அரிசியைத் தவிர்த்து.

சீனாவுடனுள்ள இலங்கையினது வர்த்தகச் சுழற்சியிற் கணிசமான அளவு விரிவு ஏற்பட்டிருக்கையில், அதன் போக்கிலுள்ள மாற்றங்கள் கடந்த இரண்டு வருடங்களையும் விட, மிகக்குறைந்த அளவிலேயே சாதகமாயிருந்தன. சீனாவுக்கான ஏற்றுமதிகள் 1962ல் 500 இலட்ச ரூபாய்களால் விரிவடைந்து, அவ்வாண்டின் மட்டத்திலிருந்து 320 இலட்ச ரூபாய்களால் அல்லது 24.1 சதவீதத்தாற் தீட்சணமாக வீழ்ச்சியுற்றன. மறுபுறத்தில் இறக்குமதிகள், 1962ல் 60 இலட்ச ரூபாய்களால் அதிகரித்து 1963ம் ஆண்டின்போது, 970 இலட்ச ரூபாய்களால் அல்லது 236.6 சதவீதத்தால் விரிவடைந்தன. வர்த்தக நிலுவை, சென்ற வருடத்தின் மிகையாகிய 920 இலட்ச ரூபாய்களுடன் ஒப்பிடுகையில், 370 இலட்ச ரூபாய்கள் கொண்ட குறைவைக் காட்டிற்று.

ஏற்றுமதிகளின் வீழ்ச்சி முழுவதும் பெரும்பாலும் இரப்பரிலிருந்து வரும் வருமானங்கள் வீழ்ச்சியுற்றமையினால் ஏற்பட்டதாகும். இவ்வருமானங்கள், சென்ற வருடத்திலிருந்தவற்றைவிட 301 இலட்ச ரூபாய்களாற் குறைவுற்று, 856 இலட்ச ரூபாய்களாக விளங்கின. இவ்வருடத்தின் போது ஏற்றுமதி செய்யப்பட்ட இரப்பரின் அளவு 652 இலட்ச இருத்தல்களாக (29573 தசாம்ச தொன்கள்) இருந்தது. இறக்குமதிகள் விரிவடைந்ததற்கு முக்கிய காரணம் அரிசியின் இறக்குமதிகளாகும். இவை 772 இலட்ச ரூபாய்களாக, அல்லது சென்ற வருடத்திலிருந்தவற்றைவிட 642 இலட்ச ரூபாய்கள் கூடியவையாக விளங்கின. இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் தொகை 3250894 அந்தர்களாக (165155 தசாம்ச தொன்கள்) விளங்கின. ஆடைவகைகளின் இறக்குமதிகள் 174 இலட்ச ரூபாய்களிலிருந்து 119 இலட்ச ரூபாய்களால் அதிகரித்திருக்கையில், சீனியினது இறக்குமதிகள் 59 இலட்ச ரூபாய்கள் கொண்ட அதிகரிப்புடன் கூடி, 94 இலட்ச ரூபாய்களாக விளங்கின.

சீனமக்கட்குடியரசுடன் செய்து கொண்ட, வர்த்தக-சென்மதி ஒப்பந்தத்தின் விதிகளுக்கிணங்க 1963ல் முடிவாக்கப்பட்ட தாயேடு சீனவுக்கான 33,000 தசாம்ச தொன்கள் கொண்ட இரப்பரது விற்பனவுக்கும் அந்நாட்டிலிருந்து பெறக்கூடிய 200,000 தசாம்ச தொன்கள் கொண்ட அரிசியினது கொள்வனவுக்கும், வழிவகுத்தது.

**ருசியாவுடனும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடனும் இலங்கை நடாத்திய வர்த்தகம்**

இலங்கை இப் பிரதேசத்துடன் நடாத்திய வர்த்தக சம்பந்தமான விபரங்களை அட்டவணை II ஆ-8 காட்டுகின்றது.

**அட்டவணை II ஆ-8**

**ருசியாவுடனும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடனும்* இலங்கை நடாத்திய வர்த்தகம்**

| வருடம் | ஏற்றுமதிகள் | | இறக்குமதிகள் | | வர்த்தக நிலுவை (பத்து இலட்சம் ரூபா) | வர்த்தக சுழல்வு | |
|---|---|---|---|---|---|---|---|
| | பெறுமானம் (பத்து இலட்சம் ரூபா) | மொத்த உள்நாட்டு ஏற்றுமதிகளின் சதவீதமாக | பெறுமானம் (பத்து இலட்சம் ரூபா) | மொத்த இறக்குமதிகளின் சதவீதமாக | | பெறுமானம் (பத்து இலட்சம் ரூபா) | மொத்த வர்த்தகச் சுழற்சியின் சதவீதமாக |
| 1956 .. | 1·3 | 0·08 | 8·0 | 0·49 | − 6·7 | 9·3 | 0·28 |
| 1957 .. | 6·5 | 0·41 | 10·6 | 0·59 | − 4·1 | 17·1 | 0·50 |
| 1958 .. | 24·7 | 1·49 | 9·2 | 0·54 | +15·5 | 33·9 | 1·01 |
| 1959 .. | 28·4 | 1·68 | 23·8 | 1·19 | + 4·6 | 52·2 | 1·41 |
| 1960 .. | 58·1 | 3·27 | 21·8 | 1·11 | +36·3 | 79·9 | 2·14 |
| 1961 .. | 78·4 | 4·67 | 51·8 | 3·04 | +26·6 | 130·2 | 3·85 |
| 1962 .. | 87·1 | 4·93 | 90·3 | 5·44 | − 3·2 | 177·4 | 5·18 |
| 1963 .. | 86·1 | 5·05 | 117·1 | 7·81 | −31·0 | 203·2 | 6·34 |

மூலம்: இலங்கைச் சுங்கப்புள்ளி விபரங்கள்.

*பல்கேறியா, செக்கோசிலவாக்கியா, கிழக்கு ஜெர்மனி, கங்கேரி, போலாந்து, ரூமேனியா, யூகோசிலேவியா.

இப்பிரதேசத்திற்கான இலங்கையினது ஏற்றுமதிகள் 10 இலட்ச ரூபாய்களால் (1.1 சதவீதம்) சிறிதளவு வீழ்ச்சியுற்றிருக்கையில், இப்பிரதேசத்திலிருந்து வந்த இறக்குமதிகள் சென்ற வருடத்திலிருந்தவற்றுடன் ஒப்பிடுகையில், 268 இலட்ச ரூபாய்களால் (29.7 சதவீதம்) தீட்சணமாக விரிவடைந்தன. இப்பிரதேசத்தினுடனுள்ள இலங்கையின் வர்த்தக நிலுவை, 1962ல் 32 இலட்ச ரூபாய்கள் கொண்ட குறையைக்காட்டி, மேலும் 278 இலட்ச ரூபாய்கள் கொண்ட குறைவாற் பாதகமான நிலையை அடைந்தது.

1963ம் ஆண்டின் போது இப்பிரதேசத்திலுள்ள இலங்கையினது பிரதான வாடிக்கைக்காரர்கள் ருசியாவும், ரூமேனியாவும், போலாந்துமாகும். இப்பிரதேசத்திற்கான மொத்த இறக்குமதிகளின் பெறுமானத்தில், இந்நாடுகள், முறையே 329 இலட்ச ரூபாய்களுக்கும் (38.2 சதவீதம்) 233 இலட்ச ரூபாய்களுக்கும் (27.1 சதவீதம்) 215 இலட்ச ரூபாய்களுக்கும் (25.0 சதவீதம்) வகைதந்தன. ருசியாவுக்கான இலங்கையினது இரண்டு பிரதான ஏற்றுமதிகள், 1962ல் உள்ளவற்றைப் போலவே, தேயிலையும் தேங்காயெண்ணெயுமாகும். இவை, அந்நாட்டுக்கான மொத்த ஏற்றுமதிகளின் பெறுமானத்தில், முறையே 191 இலட்ச ரூபாய்களுக்கும் (58.1 சதவீதம்) 110 இலட்ச ரூபாய்களுக்கும் (33.4 சதவீதம்) வகைதந்தன. தேங்காய் எண்ணெய்யின் வருமானங்கள் 18.3 சதவீதத்தால் விரிவடைந்திருக்கும் போது, தேயிலையின் வருமானங்கள், சென்ற வருடத்திலிருந்தவற்றை

விடச் சிறிதளவு மாற்றம் கூடக் காட்டவில்லை. 228 இலட்ச ரூபாய்கள் கொண்ட இரப்பர் ஏற்றுமதிகள், ரூமேனியாவுக்கான ஏற்றுமதிகளுள் ஏறக் குறைய முழுவதற்கும், வகைதந்தன. இரப்பரும், போலாந்துக்கான பிரதான ஏற்றுமதியாக, அந்நாட்டுக்கான மொத்த ஏற்றுமதிகளின் பெறுமானத்தில், 192 இலட்ச ரூபாய்களுக்கு அல்லது 89.3 சதவீதத்திற்கு வகை தந்தது.

இப்பிரதேசத்திலிருந்து வந்த மொத்த இறக்குமதிகளில், ருசியாவும், போலாந்தும், ரூமேனியாவும் பொருட்கள் வழங்குவதிற் பிரதானமானவையாக விளங்கி, முறையே 604 இலட்ச ரூபாய்களுக்கும் (51.6 சதவீதம்) 226 இலட்ச ரூபாய்களுக்கும் (19.3 சதவீதம்), 173 இலட்ச ரூபாய்களுக்கும் (14.8 சதவீதம்), வகைதந்தன. செக்கோசிலவாக்கியாவிலிருந்து வந்த இறக்குமதிகளின் பெறுமானம் 103 இலட்ச ரூபாய்களாக விளங்கின. ருசியாவிலிருந்து வந்த நிலஎரி எண்ணெய்ப் பொருட்கள் 270 இலட்ச ரூபாய்கள் கொண்ட தொகையாக விளங்கி, அந்நாட்டிலிருந்து வந்த மொத்த இறக்குமதிகளில் 44.7 சதவீதமாக இருந்தன. சென்ற வருடத்திலிருந்தவற்றுடன் ஒப்பிடுகையில், இவ் இறக்குமதிகள் 84.9 சதவீதத்தால் விரிவடைந்தன. ருசியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மற்றப் பிரதான பொருளாவது சீனியாகும். இதன் இறக்குமதிகள், 158 இலட்ச ரூபாய்களிலிருந்து 90 இலட்ச ரூபாய்களால் (132.4 சதவீதம்) விரிவடைந்தன. போலாந்தும், ரூமேனியாவும், செக்கோசிலவாக்கியாவும், இவ்வருடத்தின் போது வழங்கிய பிரதானமான பொருள் சீனியாகும். போலாந்திலிருந்தும், செக்கோசிலவாக்கியாவிலிருந்தும் வந்த இப்பொருளினது இறக்குமதிகள் முறையே, 104 இலட்சம் ரூபாய்களிலிருந்தும், 37 இலட்ச ரூபாய்களிலிருந்தும், 45.0 சதவீதத்தாலும் 37.3 சதவீதத்தாலும் தீட்சணமாக வீழ்ச்சியுற்றிருக்கையில், ரூமேனியாவிலிருந்து வந்த இறக்குமதிகள், 117 இலட்ச ரூபாய்களிலிருந்து 80.0 சதவீதத்தால் விரிவடைந்தன. கடைசியாகக் கூறப்பட்ட மூலத்திலிருந்து வந்த நிலஎரி எண்ணெய்ப் பொருட்களின் இறக்குமதிகள் 47 இலட்ச ரூபாய்களாக விளங்கின. இவை, சென்ற வருடத்திலிருந்தவற்றிலும் பார்க்க, 32 இலட்ச ரூபாய்கள் கொண்ட (213.3 சதவீதம்) அதிகரிப்போடு கூடியவையாகும்.

ருசியாவுடனும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடனும் இலங்கை நடாத்திய வர்த்தகத்தில் அவதானிக்கத்தக்க அம்சமானது, 1956க்குப் பின்னர் ஏற்பட்ட அதனது படிப்படியான அதிகரிப்பாகும். இவ்வருடங்களில் இறக்குமதிகளைவிட ஏற்றுமதிகளானவை நிலைபேறுன தன்மையை காட்டின. இலங்கையினது வெளிநாட்டு வர்த்தகத்தின் மொத்தவிற்பனவு விகிதத்தில் இப்பிரதேசத்தின் பங்கானது, 1956ல் இருந்த 0.28 சதவீதத்திலிருந்து, 1963ல் 6.34 சதவீதத்திற்கு அதிகரித்தது.

## இருபக்கத் தீர்ப்பனவுக் கணக்குகள்

ருசியாவுடனும், சீனுவுடனும், ஏனைய கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடனும், மத்திய கிழக்கு நாடுகளுடனும், இலங்கை முடிவாக்கிய சென்மதி உடன்படிக்கைகளுக்கிணங்க அமைக்கப்பட்ட இருபக்கத் தீர்ப்பனவுக் கணக்குகளினது நிகர மிச்சங்களின் கால்வருட நிலையை, அட்டவணை II ஆ-9 தருகின்றது.

## அட்டவணை II ஆ-9

### இருபக்கத் தீர்ப்பனவுக் கணக்குகள்

### சகல தீர்ப்பனவுக் கணக்குகளிலும் உள்ள மிச்சங்களின் கால்வருட நிலை, 1959-1963

பத்து இலட்சம் ரூபாய்களில்

| காலமுடிவில் நிகரவிலை | சீனு, ருசியா, ஏனைய கிழக்கு ஐரோப்பிய நாடுகள் (1) | | மத்திய கிழக்கு நாடுகள் (2) | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | போகுமதி | வருமதி | போகுமதி | வருமதி | போகுமதி | வருமதி |
| 1959 பங்குனி .. | 10·3 | | | | 10·3 | |
| ஆனி .. | | 4·5 | | | | 4·5 |
| புரட்டாதி .. | 22·2 | | | | 22·2 | |
| மார்கழி .. | | 11·7 | | | | 11·7 |
| 1960 பங்குனி .. | | 18·9 | | | | 18·9 |
| ஆனி .. | | 2·6 | | | | 2·6 |
| புரட்டாதி .. | | 13·3 | | | | 13·3 |
| மார்கழி .. | | 26·5 | | | | 26·5 |
| 1961 பங்குனி .. | | 39·4 | | | | 39·4 |
| ஆனி .. | | 25·5 | | 1·7 | | 27·2 |
| புரட்டாதி .. | 11·8 | | | 1·9 | 9·9 | |
| மார்கழி .. | 10·6 | | | 5·4 | 5·2 | |
| 1962 பங்குனி .. | | 6·9 | | 7·0 | | 13·9 |
| ஆனி .. | | 42·8 | | 10·7 | | 53·5 |
| புரட்டாதி .. | | 22·3 | | 10·8 | | 33·1 |
| மார்கழி .. | | 7·3 | | 5·4 | | 12·7 |
| 1963 பங்குனி .. | | 0·2 | | 2·7 | | 2·9 |
| ஆனி .. | 12·2 | | 0·6 | | 12·8 | |
| புரட்டாதி .. | | 6·5 | 2·1 | | | 4·4 |
| மார்கழி .. | 31·1 | | 3·1 | | 34·2 | |

மூலம்: இலங்கை மகா வங்கி.

1. புல்கேறியா, செக்கோசிலவாக்கியா, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு (கிழக்கு ஜெர்மனி) கங்கேரி, போலாந்து, ருமேனியா ஆகியன.

2. ஐக்கிய அரபுக் குடியரசு, இருன், சீரியா ஆகியன.

கவனிப்பு:—போகுமதி = இலங்கையிலிருந்து பெறவேண்டியது.
வருமதி = இலங்கைக்குச் சேர வேண்டியது.

### வர்த்தகக் கொள்கை

### இறக்குமதிக் கட்டுப்பாடுகள்

வங்கியினது 1962க்கான ஆண்டு அறிக்கையிற் கூறப்பட்டுள்ளது போல, அவ்வருடத்தின் போது, இறக்குமதிக் கட்டுப்பாடுகள் கணிசமான அளவு அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. இக்கட்டுப்பாடுகள் 1963ல் மேலும் அதிகரிக்கப்பட்டன. இவற்றுள் பிரதான கட்டுப்பாடுகளானவை, மாசி 27லும், சித்திரை 18லும், மார்கழி 4லும், கொண்டுவரப்பட்டவையாகும். இக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் விபரங்களும், அத்துடன் தொகையளவு மதிப்பீட்டோடு கூடிய அவற்றினது முக்கியத்துவமும், அட்டவணை II ஆ-10ற் தரப்பட்டிருக்கின்றன.

## அட்டவணை II ஆ-10
## இறக்குமதிக் கட்டுப்பாடு
### 1963-ம் ஆண்டிலுள்ள தனித்தனி இறக்குமதி உத்தரவுச்சீட்டு முறைகளின் படுகை*

| | இறக்குமதிகளின்படியான பெறுமானம் | | | | | | மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1961 | | 1962 | | 1963 | | 1961-ல் இருந்து 1962 | | 1962-ல் இருந்து 1963 | |
| | பத்து இலட்சம் ரூபாய் களில் | மொத்தத்தின் சதவீதமாக | பத்து இலட்சம் ரூபாய் களில் | மொத்தத்தின் சதவீதமாக | பத்து இலட்சம் ரூபாய் களில் | மொத்தத்தின் சதவீதமாக | மொத்தமாக (பத்து இலட்சம் ரூபாய் களில்) | சதவீதமாக | மொத்தமாக (பத்து இலட்சம் ரூபாய் களில்) | சதவீதமாக |
| **1963-ம் ஆண்டின் தொடக்கத்திலுள்ள கட்டுப்பாடுகளின் மொத்தப் படுகை (ஏறக்குறைய)** .. | 811 | 48 | 807 | 49 | 648 | 43 | – 4 | – 1 | –159 | –20 |
| **மாசி 27, 1963** | | | | | | | | | | |
| இறக்குமதிக் கட்டுப்பாட்டு அறிவித்தல் இல. 11/63 டீசல் எண்ணெய், உலை எண்ணெய், ''காஸ்'' எண்ணெய், சுத்திகரிக்கப்பட்ட நிலஎரி எண்ணெய் (மண் எண்ணெயும், மோட்டார் ''ஸ்பிரிட்களும்'' உட்பட) .. .. | 116 | 7 | 111 | 7 | 99 | 7 | – 5 | – 4 | – 12 | –11 |
| **சித்திரை 18, 1963** | | | | | | | | | | |
| இறக்குமதிக் கட்டுப்பாட்டு அறிவித்தல் இல. 17/63 மீன், மீன் உற்பத்திப் பொருட்களும், தயாரிப்புகளும், (தகரத்திலடைக்கப்பட்டவை) .. .. .. .. | 9 | 1 | 19 | 1 | 3 | ... | +10 | +111 | – 16 | –84 |
| **மார்கழி 4, 1963** | | | | | | | | | | |
| இறக்குமதிக் கட்டுப்பாட்டு அறிவித்தல் இல. 42/63 ''பிச்'', ''றெசின்'', பெற்ரோலியத்திலான தார், பெற்ரோலியத்திலான ''கோக்''கும் அதன் பக்க விளைவுப் பொருட்களும், நிலக்கரி, ''கோக்''கும் எரிபொருட்களும், ஊராய்வு நீக்கும் எண்ணைகளும் கொழுப்புக்களும், கனிப்பொருள் ''ஜெலி''களும் கனிப்பொருள் மெழுகுகளும், ''காஸ்'' (உற்பத்தி செய்யப்பட்டவை), வளமாக்கிகள் (சுத்திகரிக்கப்படாதவை), வளமாக்கிகள் (உற்பத்தி செய்யப்பட்டவை) .. .. .. .. .. | 78 | 5 | 84 | 5 | 99 | 7 | + 6 | + 8 | +15 | +18 |
| **1963-ம் ஆண்டு முடிவில் நிலவிய கட்டுப்பாடுகளின் மொத்தப் படுகை (ஏறக்குறைய)** .. .. | 1,014 | 60 | 1,021 | 62 | 849 | 57 | + 7 | + 1 | –172 | –17 |

மூலங்கள்: இலங்கைச் சுங்கப்புள்ளி விபரங்கள், இறக்குமதிக் கட்டுப்பாட்டு அறிவித்தல்கள்.

*படுகை பற்றிய எண்தொகைகள் ஓரளவு ஏறக்குறைய உள்ள தொகைகளாகும். ஏனெனில், கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவரப்பட்ட ஒவ்வொரு விடயத்தையும் (பல சந்தர்ப்பங்களில் அவை சிறு அளவுடையனவாக அல்லது வேறு விதமாக வகுக்கப்பட்டமையால்) சுங்கத் திணைக் களத்தின் புள்ளிவிபரங்களிலிருந்து அவற்றைப் பிரித்து அறிந்து கொள்ளமுடியாமல் இருக்கின்றது.

இவ்வருடத்தின்போது, கொண்டுவரப்பட்ட பிரதானமான இக்கட்டுப்பாடுகளமைந்த இறக்குமதிகளின் மொத்தப் பெறுமானம், 1962ம் ஆண்டினது இறக்குமதிகளுடன் அளவிட்டு நோக்குகையில், அவ்வருடத்தின் போதுள்ள இறக்குமதிகளின் பெறுமானத்தில் 2140 இலட்ச ரூபாய்களாக அல்லது 13 சதவீதமாக விளங்கியது. அவற்றினது பெறுமானம், 1963ல் 130 இலட்ச ரூபாய்களாற் குறைந்து, அவ்வருடத்து இறக்குமதிகளின் பெறுமானத்தில், 2010 இலட்ச ரூபாய்களாக அல்லது 14 சதவீதமாக விளங்கியது. வருடத் தொடக்கத்திலே, (அதாவது, இவ்வருடத்தின் போது கொண்டுவரப்பட்ட கட்டுப்பாடுகளுக்கு முன்னர்) நடைமுறையிலிருக்கும் கட்டுப்பாடுகளமைந்த இறக்குமதிகளின் பெறுமானம், 1962ம் ஆண்டினது இறக்குமதிகளோடு ஒப்பிட்டு நோக்குகையில், அவ்வருடத்து இறக்குமதிகளின் பெறுமானத்தில், 8070 இலட்ச ரூபாய்களாக அல்லது 49 சதவீதமாக விளங்கியது. 1963ல் இவ்விறக்குமதிகளின் பெறுமானம், வருடத்தின் இறக்குமதிகளில் 6480 இலட்ச ரூபாய்களுக்கு, அல்லது 43 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது. சென்ற வருடத்தினது இவற்றிற்குத் தொடர்பான, இறக்குமதிகளுடன் ஒப்பிடுகையில், இவை 1590 இலட்ச ரூபாய்கள் கொண்ட குறைவோடு கூடியவையாகும். ஆகவே வருட முடிவின் போது தனித்தனி இறக்குமதி உத்தரவுச்சீட்டு முறைகளின் படுகையானது, 1962னது இறக்குமதிகளின்படி அளவிட்டுப் பார்த்தால், ஏறக்குறைய 62 சதவீதத்திற்கும், 1963ன் போதுள்ள இறக்குமதிகளின்படி அளவிட்டுப் பார்த்தால், ஏறக்குறைய 57 சதவீதத்திற்கும், விரிவடைந்தது. இவ்விறக்குமதிகள், 1962ன் போது 10210 இலட்ச ரூபாய்களாக விளங்கி, 1963ல் 8490 இலட்ச ரூபாய்களுக்கு வீழ்ச்சியுற்றன. இவ்வீழ்ச்சி, 1720 இலட்ச ரூபாய்களை அல்லது 17 சதவீதத்தைக் கொண்டதாகும்.

நிதியமைச்சர், ஆவணி 1, 1963ல் நிகழ்த்திய தமது வரவு செலவுத் திட்ட உரையில், 1963/64க்கான வெளிநாட்டுச் செலாவணி வரவு செலவுத் திட்டமொன்று புகுத்துவதாக அறிவித்து, இக்காலத்திற்கான இறக்குமதிகளின் பிரதான பகுப்புக்களினது தயாரிக்கப்பட்ட செலவீடுகளை, மேற்போக்காகக் கூறினர். உணவுப் பொருட்களது வெளிநாட்டு விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புகளினால், இப்பகுப்புகளைத் திருத்தியமைப்பதாக, நிதியமைச்சரினல் மாசி 13, 1964ல், பாராளுமன்றத்தில் அந்நாளில் அவர் பேசிய பேச்சின்போது, அறிவிக்கப்பட்டது.

**தீர்வைகள்**

**ஏற்றுமதித்தீர்வைகள்:** கொப்பராவுக்கும், தேங்காயெண்ணெக்கும், தேங்காய்த் துருவலுக்கும், தேங்காய்களுக்குமான ஒரு சாய்வுப் பெறுமான ஏற்றுமதித்தீர்வைகள் முறை தை 7, 1963ற் புகுத்தப்பட்டது. இவற்றினது விபரங்கள் சென்ற வருட ஆண்டு அறிக்கையிற் தரப்பட்டுள்ளன. இவ் அமைப்பின்படி, இப்பொருட்களின் மேற் சுமத்தப்பட்டுள்ள தீர்வைகள், ஸ்றெயிற்ஸ் (அதாவது சிங்கப்பூர்) தேங்காயெண்ணெக்கு இலண்டனில் நிலவிய சராசரிக் கொள்விலை, காப்புறுதி, கப்பற்கூலி, உட்பட்ட விலையை அளவாகக் கொண்டு, ஒவ்வொரு வாரத்திற்குமாகப் பிரதம சுங்க அதிகாரியால் மதிப்பிடப்பட்டு அறிவிக்கப்படுகின்றது.

தேங்காய்ப் புண்ணாக்கின் மேலுள்ள தீர்வை, தை 23, 1963ல், தொன் ஒன்றுக்கு ரூபா 100/- ஆக, முன்னிருந்த தொன் ஒன்றுக்கு ரூபா 75/-லிருந்து, அதிகரிக்கப்பட்டது. வருடமுடிவின் போது, அதாவது மார்கழி மாதம் 20ம் திகதியில், இத்தீர்வையானது, தொன் ஒன்றுக்கு ரூபா 50/- ஆகக் குறைக்கப்பட்டது.

கொழும்பு ஏலங்களில் விற்கப்பட்டு, அங்கேயே களஞ்சியத்திலிடப்பட்டு, அதன் பின்னர் காலி, திருகோணமலே ஆகிய துறைமுகங்களினூடாக ஏற்றுமதி செய்யப்படும் தேயிலேகளின் மேல், இருத்தலுக்கு 33 சதங்கள் கொண்ட ஒரு சலுகை விகித ஏற்றுமதித் தீர்வையானது, சித்திரை 10, 1963 தொடக்கம் புகுத்தப்பட்டது.

சுத்தம் செய்யப்படாத ''கிளிசரீ''னின் மேலுள்ள ஏற்றுமதித் தீர்வையானது, நூறு இருத்தல்களுக்கு ரூபா 6.50 சதங்களாக ஐப்பசி 7, 1963 தொடக்கம் குறைக்கப்பட்டிருக்கிறது.

இறக்குமதித்தீர்வைகள்: சுத்தம் செய்யப்படாத பருத்தியின் மேலுள்ள இறக்குமதித் தீர்வையானது, சித்திரை 16, 1963 தொடக்கம் ஒழிக்கப்பட்டது.

1963/64 நிதி வருடத்திற்கான வரவு செலவுத்திட்டம் புகுத்தப்பட்டதுடன், பல இறக்குமதி விடயங்களின் மேல் இறக்குமதித்தீர்வைகள் ஆவணி, 1 1963 தொடக்கம், அதிகரிக்கப்பட்டன. போகப் பொருட்கள் மேலும் அல்லது அவசியமற்ற பொருட்கள் மேலும் தீர்வைகள் மிக உயர்ந்த மட்டங்களுக்கு உயர்த்தப்பட்டன. இவை பல சந்தர்ப்பங்களில் 200 சதவீதமாக அல்லது 300 சதவீதமாக விளங்கின. பாதிக்கப்பட்ட பொருட்கள், சுத்தம் செய்யும் இயந்திரங்கள், குளிரேற்றிய பெட்டிகள், நிலமினுக்கும் இயந்திரங்கள், ஒலிப்பதிவுப் பெட்டிகள், கம்பளங்கள், நீராட்டறைக்கான ஆடம்பர பொருத்திகள் முதலியனவற்றை, உட்படுத்தின. சிறந்த ரகப் பெற்றோல் மேலுள்ள தீர்வை கலனுக்கு 10 சதமாக உயர்த்தப்பட்டது. கூடுதலாக, இறக்குமதிகளுக்குப்பதிலீடாக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காகக், குறிப்பிட்ட சில தீர்வைகள், அதிகரிக்கப்பட்டன. மறுபக்கத்தில், வாழ்க்கைச் செலவைக் கணிசமான அளவு பாதிக்கும், சில பொருட்களின் மீதுள்ள தீர்வைகள் குறைக்கப்பட்டன. குறிப்பிடப்பட்ட பருத்தித் துணித்துண்டுகள், சலுகையானதும், பொதுவானதும், ஆகியவற்றின் மேலுள்ள தீர்வை, முறையே, 18 சதவீதத்திலிருந்தும் 23 சதவீதத்திலிருந்தும் 15 சதவீதத்திற்கும் 20 சதவீதத்திற்கும் குறைக்கப்பட்டிருக்கையில், பருத்திச் சேலேகள் மீதுள்ள தீர்வை, சலுகையானதும், பொதுவானதும் முறையே 45 சதவீதத்திலிருந்தும், 50 சதவீதத்திலிருந்தும், 40 சதவீதத்திற்கும், 45 சதவீதத்திற்கும், குறைக்கப்பட்டது. செயற்கைப் பட்டுத்துணித் துண்டுகளின் சில விடயங்கள் மீதும், இதுபோன்ற குறைப்புகள் கொண்டு வரப்பட்டன. மண்ணெண்ணெய் மீதுள்ள தீர்வை, கலனுக்கு 12 சதத்திலிருந்து கலனுக்கு 8 சதமாகக் குறைக்கப்பட்டது.

420 இலட்ச ரூபாய்கள் பெறுமானமுள்ள அதிகப்படியான வருவாயைக் கொடுக்கும் என மதிப்பிடப்பட்ட, இத்தீர்வைகளினது அதிகரிப்புகள், பிரதானமாக நாட்டின் பொருளாதாரத்திலுள்ளதான, இறக்குமதிகளினது கேள்வியும் உட்பட்ட, அளவுக்கு மீறிய கேள்வியைக் குறைப்பதற்கு எடுக்கப்பட்ட திருத்த நடவடிக்கைகளின் ஒரு பகுதியைப் பிரதிபலித்தன.

**வர்த்தக ஒப்பந்தங்கள்**

இவ்வருடத்தின் போது, கீழ்க்காணும் நாடுகளுடன் வர்த்தக அல்லது சென்மதி ஒப்பந்தங்கள் முடிவாக்கப்பட்டன.

**அவுஸ்திரேலியா:** 1958ம் ஆண்டு அவுஸ்திரேலியாவுடன் இலங்கை முடிவாக்கிய ஒப்பந்தம், 1963ம் ஆண்டு, தை மாதம் 2ம் திகதி பரிமாறப்பட்ட கடிதங்கள் மூலமாக அவுஸ்திரேலியாவின் உடன்பாட்டுடன், 1963ம் ஆண்டு தொடங்கி இரண்டு வருடகாலத்திற்கு நீடிக்கப்பட்டது. இவ்வுடன்படிக்கையானது 1963, 1964 ஆகிய ஒவ்வொரு வருடங்கட்கும் இலங்கை அரசாங்கம் 100,000 தொன்கள் கொண்ட அவுஸ்திரேலியக் கோதுமை மா கொள்வனவு செய்வதற்கு, இடமளித்துள்ளது. அவுஸ்திரேலியாவானது தனது பங்கில், தேயிலை, தேங்காய்த்துருவல் குடிசைக் கைத்தொழிற் பொருட்கள், புகையிலை ஆகிய இலங்கையினது ஏற்றுமதிகள் அவுஸ்திரேலியச் சந்தையில் வர்த்தக ரீதியில் ஓரளவு சுலபமாகக் கிடைக்குமென்பதை, நிச்சயப்படுத்திக் கொள்ளும்.

**இருன்:** 1963ம் ஆண்டு, மாசி மாதம், 18ம் திகதி தொடக்கம் அமுலுக்கு வந்து, ஒரு வருடகாலத்திற்குச் செல்லுபடியாகக் கூடிய ஒரு வர்த்தக ஒப்பந்தம் இருனுடன் 1963ம் ஆண்டு ஜனவரி மாதம் 29ம் திகதி முடிவாக்கப்பட்டது. இவ்வொப்பந்தமானது, இலங்கையிலிருந்து இருனுக்கு 10 இலட்சம் பவுண் பெறுமானமுள்ள கறுப்புத் தேயிலை ஏற்றுமதிக்கும், அந்நாட்டிலிருந்து சீரகம், காய்ந்தபழவகைகள், பருப்பு வகைகள், தார், கருவாடு உட்பட, அதேயளவு பெறுமானமுள்ள பொருட்களின் இறக்குமதிக்கும், இடமளித்துள்ளது. அதே திகதியிற் பரிமாறப்பட்ட கடிதங்கள், இருன் அரசாங்கம், 500,000 பவுண் பெறுமானமுள்ள, சமமான இரண்டு தவணைக் கட்டணங்களுடன், தேயிலையை இறக்குமதி செய்ய அதிகாரமளிக்கும் என்பதையும், முதற்தவணைக் கட்டணத்துடன் உண்மையில் இறக்குமதி நடந்த பின்னர், இரண்டாவது தவணைக் கட்டணத்திற்குத் தானுகவே உடனடியாக அதிகாரம் கொடுக்கப்படவேண்டுமென்பதையும், திட்டவட்டமாகக் கூறுகின்றன. இலங்கை அரசாங்கம் 600,000 பவுண் பெறுமானமுள்ள இருனின் பொருட்களை 350,000 பவுண்கள், 250,000 பவுண்கள் கொண்ட இரண்டு தவணைக்கட்டணங்களுடன் இறக்குமதி செய்ய ஒப்புக்கொள்வதாகவும், இருன் 500,000 பவுண் பெறுமானமுள்ள தேயிலையை முதற்தவணைக் கட்டணத்துடன் இறக்குமதி செய்ததன் பின்னர், இரண்டாவது தவணைக் கட்டணத்திற்குத் தானுகவே உடனடியாக அதிகாரம் கொடுக்கப்படுவதாகவும் இவற்றில் கூறப்பட்டிருக்கின்றன.

வர்த்தக ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்த வசதியளிக்கும் பொருட்டு, ஒரு வருடத்திற்குச் செல்லுபடியாகக்கூடிய சென்மதி ஒப்பந்தமொன்று அதேதிகதியில் முடிவாக்கப்பட்டது. இவ்வொப்பந்தத்தின் பிரகாரம், இவ்விரு நாடுகளுக்கிடையேயுள்ள குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்கள், தீர்ப்பனவுக் கணக்குகள் வழியே ஸ்டேர்லிங் இருத்தல்கள் மூலமாக நடைபெற்று, அவ்விரு நாடுகளிலுமுள்ள மகாவங்கியில் முடிவு செய்யப்படவேண்டும். இவ்வொப்பந்தம் 100,000 பவுண் கொண்ட பரஸ்பர சுழற் கடனுக்கும், இத்தொகைக்கும் மீறிய மிச்சங்களை மூன்று மாத காலத்திற்குள் இருநாடுகளும் ஏற்றுக்கொள்ளக் கூடிய நாணயத்தின் மூலமாக நிர்ணயப்படுத்திக் கொள்வதற்கும், இடமளிக்கிறது.

**மாலைத்தீவுகள்:** கைச்சாத்திட்ட திகதியிலிருந்து 1964ம் ஆண்டு முடிவுவரை செல்லுபடியாகக்கூடிய வர்த்தக ஒப்பந்தமொன்று, மாலைத்தீவுகளுடன் 1963ம் ஆண்டு, பங்குனி மாதம் 6ம் திகதி முடிவாக்கப்பட்டது. இவ்வொப்பந்தத்தின் பிரதான ஷரத்துக்களில் ஒன்ருவது, இலங்கை அரசாங்கத்திற்கு வருடாந்தமாக 3000 தொன்கள் கொண்ட மாசிக்கருவாடு குறித்த விலைகளிற் கிடைக்கும்படி செய்வதாக ஒத்துக்கொண்ட மாலைத்தீவுகள் அரசாங்கத்தினது உடன்படிக்கையாகும். 1963ம் ஆண்டில் விலைகள் திருத்தியமைக்கப்பட இடமளிக்கப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கமானது தன் பங்கில், மாலைத்தீவுகளுக்கு அவை ஏற்றுமதி செய்வதற்கான, வெங்காயமும், கிழங்கும், நிலஎரி எண்ணெய்ப் பொருட்களும், மருந்துப்பொருட்களும், நுகர்ச்சிப்

பொருட்களின் மற்றும் சில விடயங்களும் உட்பட்ட சில பொருட்களினது குறித்த தொகைகளுக்கு, உத்தரவுச் சீட்டுக்கள் கொடுப்பதை ஏற்றுக்கொண்டது. இதற்குக் கூடுதலாக. அதேதிகதியில் நடைபெற்ற கடிதங்களின் பரிமாறுதல்கள், மாலைத்தீவுகளின் இறக்குமதிகளுக்காகவும், மற்றும் கல்வி, யாத்திரை, தொழிநுட்ப ஆளணி சேர்த்தல் போன்ற தேவைகளுக்காகவும், இலங்கையானது தனது பங்கில் ஒரு வரையறைக்குட்பட்ட அந்நிய செலாவணியை விட்டுக்கொடுப்பதற்கு, இடமளித்துள்ளன. உள்நாட்டு வர்த்தக வங்கிகளினூடாகப் பெறக்கூடிய, வரையறைக்குட்பட்ட மேலதிகப் பற்று வசதிகளும், மாலைத்தீவுகள் அரசாங்கத்தினது விருப்பத்திற்கு ஏற்ப விடப்பட்டுள்ளன. இவை இலங்கைச் செலாவணிக் கட்டுப்பாட்டின் அங்கீகாரத்திற்கு உட்பட்டன.

**சீனமக்கட் குடியரசு:** சீனமக்கட் குடியரசுடன் 1962ம் ஆண்டு ஐப்பசி மாதம் 3ம் திகதி செய்து கொண்ட வர்த்தகச்-சென்மதி உடன்படிக்கையின் விதிகளுக்கிணங்க, 1964ம் ஆண்டின் பண்டமாற்றுக்கான ஒரு தாயேட்டில் 1963ம் ஆண்டு ஐப்பசி மாதம் 10ம் திகதியிற் கையொப்பமிடப்பட்டது. இரு நாடுகளும், இத்தாயேட்டின்படி, வர்த்தகமானது இருபக்கத்தும் ஏறக்குறைய 1100 இலட்ச ரூபாய்கள் பெறுமதிக்கு விரிவடைய ஒத்துக்கொண்டன. இவ்வுடன்படிக்கையானது, சீனுவினது பங்கில் 35,000 தசாம்ச தொன்கள் கொண்ட, ஏறக்குறைய 950 இலட்ச ரூபாய்கள் பெறுமானமுள்ள கொள்வனவும், இலங்கையினது பங்கில், 200,000 தசாம்ச தொன்கள் கொண்ட அதேயளவு பெறுமானமுள்ள அரிசிக் கொள்வனவும், ஆகிய பொறுப்பேற்றங்களை உட்படுத்தியுள்ளது.

**பர்மா:** 1964ம் ஆண்டு, தைமாதம் 1ம் திகதி தொடக்கம் மூன்று வருடங்கட்குச் செல்லுபடியாகக்கூடிய ஒரு வர்த்தக ஒப்பந்தம், பர்மாவுடன் 1963ம் ஆண்டு கார்த்திகை மாதம் 7ம் திகதியில் முடிவாக்கப்பட்டது. இவ்வொப்பந்தம், இருநாடுகளினதும் ஏற்றுமதிகளை வெவ்வேறு பட்டோலைகளிற் குறித்து, அவற்றினது வர்த்தகம், அந்தந்த நாட்டில் நடைமுறையில் உள்ள இறக்குமதி, ஏற்றுமதி, அந்நிய செலாவணி ஆகியவற்றின் ஒழுங்குகளுக்கிணங்க, வளர்க்கப்பட வேண்டுமென்பதைக் கூறுகிறது. கடிதப் பரிமாறுதலும் இவ்வொப்பந்தத்துடன் சேர்ந்து நடைபெற்றது. இதன்படி, இலங்கை 1964ம் ஆண்டு தை மாதம் 1ம் திகதி தொடக்கம், வருடாந்தமாக மூன்று வருட காலத்திற்கு, 250,000 தொன்களுக்குக் குறைவுபடாத அரிசியைப் பர்மாவிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு ஒப்புக்கொண்டது. ஒவ்வொரு வருடத்திற்கான அரிசியினதும், தொகை, விலை, தன்மை ஆகியன பரஸ்பர உடன்பாட்டுடன், முதல் வருட மார்கழி மாதம் 31ம் திகதிக்கு முன்பு தீர்க்கப்படவேண்டும். பர்மா அரசாங்கமானது, ஒப்பந்தத்தின்போது ஒவ்வொரு வருடத்திற்கும் ஆகக் குறைந்தது 175 இலட்ச ரூபாய்கள் பெறுமானமுள்ள இலங்கையின் பொருட்களைத், தனது நாட்டிற்குள் இறக்குமதி செய்வதற்கு வசதியாக, வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கும் என்பதும், ஒத்துக்கொள்ளப்பட்டது.

**கொறியமக்கள் ஜனநாயகக் குடியரசு:** ஒரு வருட காலத்திற்குச் செல்லுபடியாகக்கூடியதாகவும், ஆனுல் முறிவு ஏற்படாதவிடத்துத் தன்னியக்கமாகவே காலத்தை நீடிப்பதற்கும் இடமளித்து, 1963ம் ஆண்டு மார்கழி மாதம் 6ம் திகதி கொறிய மக்கள் ஜனநாயகக் குடியரசுடன் ஒரு சென்மதி ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இவ்வொப்பந்தத்தின்படி இருநாடுகளுக்கிடையேயுமுள்ள நடைமுறையிலுள்ள சென்மதிகள், அவ்விரு நாடுகளினதும் மகாவங்கிகளிலுள்ள தீர்ப்பனவுக் கணக்குகள் மூலமாகத் தீர்க்கப்படவேண்டும். இக்கணக்குகள், வட்டிகளைச் சேர்க்காதவைகளாக விளங்கி, ஸ்டேர்லிங் இனத்தைச் சார்ந்தவையாக இருத்தல் வேண்டும்.